Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 16 சுபகிருது வருடம், ஆனி மாதம் 29ஆம் திகதி புதன்கிழமை (13.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 13, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50



## மற்றொரு கேஸ் நாட்டை வந்தடைவு

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட மற்றுமொரு எரிவாயுக் கப்பல் நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளது.

3700 மெற்றிக் தொன்களை ஏற்றிய எரிவாயு கப்பல் நாட்டுக்கு வந்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆய்வுப் பணிகள் முடிவடைந்தவுடன், விநியோகத்திற்காக உடனடியாக எரிவாயு இறக்கும் பணி நேற்று பிற்பகலில் ஆரம்பமானது.

எதிர்காலத்தில் மேலும் பல எரிவாயுக் கப்பல்கள் இலங்கையை வந்தடையவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



## அலரி மாளிகைக்குள் அடிதடி; 10 பேர் காயம்

02 பக்கம்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய இரதோற்சவம் நேற்று நடைபெற்றது. (படம் - யாழ். நிருபர்)

## எரிவாயு வரிசையில் காத்திருந்தவர் மரணம்



கொட்டாவ பஸ் நிலையத்திற்கு அருகில் எரிவாயு வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

## எரிவாயு கொள்வனவு தீர்மானத்திற்கு இடைக்காலத் தடை கோரி மனு

ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவை 129 டொலருக்கு கொள்வனவு செய்ய லிட்ரோ நிறுவனம் ஏற்படுத்திக்கொண்டுள்ள தீர்மானத்திற்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாகானந்த கொடித்துவக்கினால் இந்த எழுத்தாணை மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02 பக்கம்

## கோட்டா வெளியேற வந்தன தடைகள்!

### விமான நிலையங்களின் ஊடாக செல்ல முடியாமல் கடல் வழியாக செல்ல ஆராய்வு

•யோ.தர்மராஜ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது பதவி இராஜினாமாவின் பின்னர் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகளைசெய்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை என அறியமுடிந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இன்று தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதுடன், அதற்கு முன்னர் விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

இதனால்,... 02 பக்கம்



## பாணின் விலை ரூ.20 அதிகரிப்பு



450 கிராம் பாண் ஒன்றின் விலை 20 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. இதன்மூலம் புதிய விலையாக ரூ.190 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பேக்கரி பொருட்களின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு கோதுமை மா நிறுவனங்கள் எடுத்த தீர்மானமே விலை அதிகரிப்புக்கு காரணம் என சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவு நிலவரப்படி கோதுமை மாவின் விலை 34 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக, பேக்கரி உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். நேற்று நள்ளிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்தது.

## இலங்கையின் நிலைமை மிகவும் சிக்கலானது;

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர்

இலங்கையின் தற்போதைய நிலைமை மிகவும் சிக்கலானது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் புரட்சி வெடித்துள்ளது.

இந்நிலையில், திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் "இலங்கையின் தற்போதைய நிலைமை உணர்ச்சிவசமும் சிக்கலும் கொண்டது. நம்முடைய அண்டை நாட்டினருக்கு நாம் ஆதரவு தரவேண்டும். இந்தக் கடினமான காலகட்டத்தைத் தாண்ட அவர்களுக்கு உதவவேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.



## பதில் ஜனாதிபதியாக ரணில் இன்று பதவியேற்றால் அது இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய மைல்கல்

02 பக்கம்

## கோட்டாவின் விசா கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்ததா?

பதவியிலிருந்து விலகுவதாக உறுதியளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்கா செல்லும் விசாவுக்கான கோரிக்கையை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நிராகரித்து விட்டதாக தெரியவருகிறது.

முன்னர் இலங்கை மற்றும் அமெரிக்காவின் இரட்டைக் குடியுரிமை பெற்றிருந்த கோட்டாபய 2019 தேர்தலுக்கு முன்னதாக, வெளிநாட்டுப் பிரஜைகள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கும் சட்டத்தின் காரணமாக தனது அமெரிக்க குடியுரிமையைக் கைவிட்டார். 02 பக்கம்

## மஹிந்த ராஜபக்ஷ, பெசில் உள்ளிட்ட 6 பேருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கக்கோரி மனு



02 பக்கம்

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்ரமசிங்க ஆகியோரை பதவி விலகக் கோரி நேற்று கண்டி தலதா மாளிகை முன்னால் தேசிய பிக்குகள் முன்னணியினர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.



## உஷ்



சஜித் பிரேமதாச பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட அவரது கட்சி தீர்மானமொன்றை நிறைவேற்றியது.

அந்த நிகழ்வின் பின்னர் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை தொடர்புகொண்ட சஜித்துக்கு நெருக்கமான பிரமுகர் ஒருவர், சஜித்தினால் ஜனாதிபதியாக முடியாதென்றும் அது பொய்வேலை என்றும் கூறி சஜித்தை ஒரு வாங்கு வாங்கினாராம்.

எதிர்க்கட்சியில் இல்லாத ஒற்றுமை குறித்து அப்போது கவலைப்பட்டாராம் அதனைக் கேட்ட அரசியல் தலைவர்.

## அமெரிக்கா செல்வதற்குப் புறப்பட்டபோதும் விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட பெசில்!

### அதிகாரிகளின் எதிர்ப்பினால் வீடு திரும்பினார்



02 பக்கம்

## ஜனாதிபதி கோட்டா பதவி விலகிய பின்னர் பொதுச் சொத்தில் நிலை கொள்ளாதீர்!

### ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை

•யோ.தர்மராஜ்

முழு நாட்டு மக்கள் எதிர்பார்த்ததன்படி, (இன்று) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய பதவியிலிருந்து விலகிவிடுவார். அவர் பதவி விலகியதன் பின்னர் தற்போது மக்களின் பொறுப்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை போன்ற தேசிய சொத்துக்களை பாதுகாப்பு தரப்பினர் பொறுப்பேற்றுக்கொள்ள இடமளிக்கும் வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொள்வதாக கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். 02 பக்கம்



## கமெண்ட் கந்தர்..

கோ ஹோம் பெசில் எண்டு சொல்லுவாங்கள் எண்டுதான் பெசில் புறப்பட்டார்..

ஆனால் அவரையும் தடுத்து நிப்பாட்டியிருக்குறாங்கள்......



# மன்னார் இலுப்பைக்கடவை பகுதியில் 203 கிலோ கேரள கஞ்சா பொதிகள் மீட்பு

## ஒருவர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பகுதியில் சுமார் 203 கிலோ கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முழங்காவில் கடற்படை முகாம் அதிகாரிகளால் நேற்று முன்தினம் (11) மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது குறித்த கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான படகொன்றை சோதனைக்கு உட்படுத்தியபோது அதில் மறைத்து



வைக்கப்பட்டிருந்த நிலையில், கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

### கோட்டாவின் விசா...

பின்னர் அவர் பெரும்பான்மையுடன் தேர்தலில் வெற்றி பெற்றார், ஆனால் கடுமையான பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் அவர் பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

“சமீபத்திய நிகழ்வுகளுக்குப் பிறகு அவர் அமெரிக்காவிற்கு செல்லும் பாதுகாப்பான வழிமுறையை நாடினார், ஆனால் அது மறுக்கப்பட்டது” என்று கொழும்பை தளமாகக் கொண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, ஜூலை 13ஆம் திகதி இன்று உத்தியோகபூர்வமாக பதவி விலகுவார் என எதிர்பார்க்கப்படும் கோட்டாபய, வேறு தெரிவுகளை ஆராய்ந்து வருவதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

### எரிவாயு கொள்வனவு...

லிட்ரோ எரிவாயு நிறுவனம், அதன் தலைவர் முதித பீரிஸ், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பிரதமரின் ஆலோசகரான சாகல ரத்நாயக்க, சியம் கேஸ் ட்ரேடிங் நிறுவனம், உள்ளிட்ட 08 பேர் மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் எரிவாயுவிற்கான நெருக்கடியை கருத்திற்கொண்டு, உடனடி கொள்வனவிற்கு லிட்ரோ நிறுவனம் தீர்மானித் துள்ளதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, கப்பல் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் உட்பட ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவிற்கு 96 அமெரிக்க டொலர் வீதம் 2,80,000 மெற்றிக் தொன் எரிவாயுவை வழங்குவதற்கு சியம் கேஸ் ட்ரேடிங் இணக்கம் தெரிவித்துள்ளதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இதற்கு அமைச்சரவையின் ஒப்புதலும் வழங்கப் பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கும்போது, குறித்த கொள்வ னவை இரத்துசெய்து, ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவை எக்டிவ் ஓயில் சப்ளயர்ஸ் எனும் நிறுவனத்திடமிருந்து 129 டொலருக்கு கொள்வனவு செய்ய உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனூடாக மக்களின் பெருந்தொகை பணம் வீணாகும் என்பதோடு, முதித பீரிஸ், ரணில் விக்ரமசிங்க மற்றும் சாகல ரத்நா யக்க ஆகிய பிரதிவாதிகள் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக மனுவில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

எனவே, ஒரு மெட்ரிக் தொன் எரிவாயுவை 129 அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையை செல்லுபடியற்றதாக்கி ஆணை பிறப்பிக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

அத்துடன், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள குறைந்த விலையின் கீழான, எரிவாயு கொள்வனவை முன்னெடுக்குமாறு மற்றுமொரு உத்தரவை பிரதிவாதிகளுக்கு பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

---

### எரிவாயு வரிசையில்...

கொட்டாவ பகுதியைச் சேர்ந்த ஜயதிஸ்ஸ பெரேரா என்ற மின் பொறியியலாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

இவர் நேற்று 12) காலை கொட்டாவ நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரதான பஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள லிட்ரோ எரிவாயு விநியோக நிலையத்திற்கு தனது மகனுடன் சென்றதாக கூறப்படுகிறது.

அதற்காக ஏராளமானோர் வந்து வரிசையில் காத்திருந்தனர், உயிரிழந்த நபரும் காரில் வந்து எரிவாயு சிலிண்டர் வாங்கும் எண்ணத்தில் அங்கு காத்திருந்தார். சுகவீனமுற்ற நபர் சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

---

### அலரி மாளிகைக்குள்...

அலரி மாளிகைக்குள் இரு குழுக்களுக்கிடையில் நேற்று 12 அதிகாலை ஏற்பட்ட அடிதடியில் காயமடைந்த 10 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி. ஆதரவாளர்களுக்கும், போராட்டக் காரர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. காயமடைந்தவர்களில் பெண்ணொருவரும் உள்ளடங்குகிறார். காயமடைந்தவர்களில் இருவர் சிகிச்சையின் பின் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர்.

---

### மஹிந்த ராஜபக்ஷ, பெசில்...

மஹிந்த ராஜபக்ஷ, பெசில் ராஜபக்ஷ, அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் எஸ்.ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட 6 பிரதிவாதிகளுக்கு பயணத்தடை விதிக்குமாறு ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா அமைப்பு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

ஜூன் 17 அன்று, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா மற்றும் மூன்று பேர் இணைந்து இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவை (SC/FRA/212/2022) தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான முடிவு ஜூலை 01ஆம் திகதி நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

அப்போது, இரு பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இதேபோன்ற மற்றொரு மனுவுடன் தொடர்புடைய மனுவையும் சேர்த்து விசாரிக்குமாறு நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

இந்த கோரிக்கையை பரிசீலிக்க தலைமை நீதிபதிக்கு நீதிமன்றம் அனுப்பியுள்ளது.

அவ்வாறான பரிசீலனைக்குப் பின்னர் மனு ஜூலை 27ஆம் திகதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளதாக டிரான்ஸ்பரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

ஆரம்ப மனுவில் கோரப்பட்ட இடைக்கால உத்தரவைப் பெறுவதற்கு ஆதரவாக வாதங்களைத் தாக்கல் செய்வதற்கான விரைவான திகதிக்கான கோரிக்கையும் அதில் அடங்கும்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் முன்னாள் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் வழக்கு நிலுவையில் இருக்கும் வேளையில் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

### கோட்டா வெளியேற வந்தன...

கடல்வழி மார்க்கத்தை பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறுவதற்கான மாற்று வழியை பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அறிய முடிகின்றன.

சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே முக்கிய காரணம் என முழு நாட்டு மக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

22 மில்லியன் மக்களை துன்பதுக்குள் தள்ளிவிட்டு, அத்தியாவசிய தேவைகள் மற்றும் பொருட்களை இறக்குமதி செய்தவதற்குக் கூட அந்திய செலாவணி இல்லாத நிலைமைக்கு நாட்டின் பொருளாதாரத்தை தவறாக வழிநடத்தியுள்ளதாக ராஜபக்ஷக்கள் குடும்பத்தின் மீது குற்றம் சுமத்தப்படுவதோடு, இவற்றுக்கு பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில், இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவுள்ளதாகக் கூறி அதற்கான இராஜிநாமா கடிதத்தையும் சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஆயிரக்கணக்கான மக்களால் கடந்த 9 ஆம் திகதி அவருடைய வீடு மற்றும் அலுவலகம் முற்றுகையிடப்பட்டதால், அங்கிருந்து வெளியேறி, கடற்படைக்குச் சொந்தமான படகொன்றின் மூலம் திருகோணமலையிலுள்ள கடற்படை முகாமிற்குச் சென்றதாக அறிய முடிந்தது. பின்னர், டுபாய்க்குச் செல்வதற்காக மீண்டும், அங்கிருந்து சிறிய விமானம் மூலம் கட்டுநாயக்க இராணுவ விமான நிலைத்திற்கு வருகை தந்துள்ளார்.

பின்னர், விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முயற்சித்த போதிலும், பயணிகள் மற்றும் அங்குள்ள அதிகாரிகளின் எதிர்ப்பினால் அந்த முயற்சியும தோல்வியடைந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிப தியாக சிறப்புரிமைகளை அனுபவிப்பதால், கைது செய்து தடுத்து வைத்திருக்கும் சூழ்நிலையை தடுப்பதற்காக, ஜனாதிபதி பதவிலியி ருந்து விலகுவதற்கு முன்னரே நாட்டை விட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத் துள்ளதாக அறிய முடிந்தது.

எனினும், குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள், விமான சீட்டில் முத்திரையிடுவதற்கு பிரமுகர்களின் நுழைவாயிலுக்குச் செல்ல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுமதி வழங்காதமையினாலும் பாதுகாப்புக் கருதி, சாதாரண பயணிகளின் நுழைவாயிலின் வழியாக செல்வதையும் ஜனாதிபதி நிராகரித்திருந்ததாக அறிய முடிந்தது.

இதனால், டுபாய்க்குச் செல்லும் நான்கு விமானங்களையும் தவறவிட்டதால், கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அருகிலுள்ள இராணுவ முகாமில் அவரும் அவருடை மனைவியும் நேற்றுமுன்தினம் இரவை கழித்ததாக அறிய முடிந்தது.

அதேபோன்று, முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவும், விமான நிலைய ஊழியர்களுடன் இதேபோன்ற எதிர்ப்புக்கு பின்னர், நேற்று அதிகாலை டுபாய் செல்லும் எமிரேட்ஸ் விமானத்தை தவறவிட்டார்.

இலங்கைப் குடியுரிமைக்கு மேலதிகமாக அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுள்ள பெசில் ராஜபக்ஷ, அதிகாரிகளின் எதிர்ப்புகளுக்கு பின்னர், வணிகப் பயணிகளுக்கான விசேட கட்டணச் சேவையைப் பயன்படுத்த முயற்சித்த போது, விமான நிலைய மற்றும் குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அந்தச் சேவைகளிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தனர்.

அத்தோடு, அவர் செல்லும் விமானத்திலுள்ள ஏனைய பயணிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித் ததால், அங்கு ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து, அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேறினார்.

இதேவேளை, மக்களின் எதிர்ப்பு மற்றும் ஜனாதிபதி மாளிகையை மக்கள் முற்றுகை யிடுவதற்கு வருகை தரும்போது, அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேற முற்பட்ட, பெசில் ராஜபக்ஷ, தன்னுடைய கடவுசீட்டை ஜனாதிபதி மாளிகையில் தவறவிட்டதால், அவர் புதியதொரு அமெரிக்க கடவுச்சீட்டை பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறிய கிடைத்தது.

ஜனாதிபதியை கடற்படை ரோந்துக் கப்பலில் வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்வது குறித்து ஜனாதிபதியின் நெருங்கிய இராணுவ அதிகாரிகள் தற்போது பேச்சுவார்த்தை நடத்திவருவதாக பாதுகாப்பு உயர் மட்ட அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

கடல் வழியாக நாட்டை விட்டு வெளியேறு வதே இப்போதுள்ள சிறந்த வழி என பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளதால், ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ, மாலைத்தீவு அல்லது இந்தியாவுக்குச் சென்று, அங்கிருந்து டுபாய்க்குச் செல்வதற்கான விமானத்தை பெற்றுக் கொள்ளலாம் எனவும் உயர் மட்ட பாதுகாப்பு தகவர்கள் தெரிவித்தன.

இதேவேளை, 2013ஆம் ஆண்டு திறக்கப்பட்டு மஹிந்த ராஜபக்ஷவின் பெயரிடப்பட்ட மத்தல சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஜனாதிபதியை வாடகை விமானம் மூலம் நாட்டிற்கு வெளியே அழைத்துச் செல்வது மற்றொரு தெரிவாக இருந்தாலும் அங்கும் எதிர்ப்புகள் வரலாம் எனவும் கூறப்படுகின்றன. நேற்று மத்தள விமான நிலையத்திலும் அதிகாரிகள் பணிகளை புறக்கணித்திருந்தனர்.

---

### பதில் ஜனாதிபதியாக ரணில்...

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகும் பட்சத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்றே பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்கலாம் என அரசியல் வட்டார தகவல்கள் நேற்றிரவு ‘தமிழன்’ செய்திகளிடம் உறுதிப்படுத்தின.

ஜனாதிபதி பதவி விலகியதும் பிரதம நீதியரசரின் முன்னிலையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொள்வார் எனவும் தெரிவித்தன.

கொரோனா தொற்றுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் பொருத்தமற்ற பொருளாதார கொள்கைகளினால் இலங்கையின் பொருளாதார பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இதனால், ஜனாதிபதி மற்றும் அவரின் கீழுள்ள அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற எதிர்ப்புகள் வழுக்க ஆரம்பித்தன. இதனால், அரசியல் நெருக்கடியும் உக்கிரமடைந்தன..

இதற்கிடையில், காலிமுகடத்திடலில் 92 நாட்களுக்கு மேலாக முகாமிட்டிருந்த போராட்டக் காரர்களின் அழுத்தத்தினால் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகியதுடன், பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் எனக் குற்றச்சாட்டப்பட்ட முன்னாள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவும் நாடாளுமன்ற பதவியையும் துறந்தார்.

எனினும், ஜனாதிபதி பதவி துறப்பதற்கு விரும்பாது, பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்த நிலையில், கடந்த 9ஆம் திகதி முழு நாட்டு மக்களும் கொழும்புக்கு வந்து, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை போன்றவற்றை முற்றுகையிட்டு, கைப்பற்றினர்.

இவற்றை மக்கள் பொறுப்பேற்றுக்கொண்டதால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்கிடையில், அவசரமாக கூட்டப்பட்ட கட்சித் தலைவர் கூட்டத்தில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும். அவர்கள் பதவி விலகியதும் அடுத்த 30 நாட்களுக்கு சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக்கொண்டு, இடைக்கால அரசாங்கம் ஒன்றையும் அமைக்க வேண்டும் என தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கட்சித் தலைவர்களின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி அறிவித் திருந்ததுடன், இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாக இருந்தாலும் தானும் பிரதமர் பதவியை இராஜிநாமா செய்வதற்கு தயாராகவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், கட்சித் தலைவர்களின் முடிவுகளை எழுத்து மூலமாக ஜனாதிபதிக்கு சபாநாயகர் அறிவித்தபோது, எதிர்வரும் 13ஆம் திகதி அதாவது இன்று தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக கூறியுள்ளார். ஆனால், எதிர்க்கட்சிகன் கூறியது போன்று இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இழுபறியில் இருப்பதால், பிரதமர் ரணில் விக்ரமசிங்க தன்னுடைய பதவியை இராஜிநாமா செய்யவில்லை.

இந்த நிலையில், ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்தது போன்று, இன்று பதவி விலகினால், சட்டத்துக்கு அமைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே பதில் ஜனாதிபதியாக இருப்பார். அதற்கமைய, இன்று அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொள்ளலாம் என கூறப்படுகின்றன.

மேலும், பிரதமரும் பதவி விலகினாலே, சபாநாயகரால் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்க முடியும் என்பதோடு, நாடாளுமன்றத்தினால் புதிய ஜனாதிபதியை நியமிப்பதற்காக 20ஆம் திகதியே வாக்கெடுப்பு நடத்தவுள்ளதால், குறைந்த பட்சம் அதுவரை ரணில் விக்ரசிங்கவே பதில் ஜனாதிபதியாக இருப்பார் என அரசியல் நிபுணர்கள தெரிவித்தனர்.

இதேவேளை, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதால், ரணில் விக்ரமசிங்கவே பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்கவுள்ளது உறுதியாகியுள்ளது.

***வரலாறு படைப்பாரா ரணில்?***

ஒருவேளை, ஜனாதிபதி பதவி விலகியதும் ரணில் விக்ரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டால், அவர் முதல் முறையாக ஜனாதிபதியாக பதவி ஏற்பார். குறிப்பாக, கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் விரும்பாத ஒருவராக ரணில் விக்ரமசிங்க தோல்வியடைந்தார். எனினும், கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தில் ஒன்றை நபராக நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்து, பிரதமராகி, ஜனாதிபதியாகினால் அது வரலாற்று நிகழ்வாக பதியப்படும்.

மக்கள் விரும்பாத தலைவர் ஒருவர் ஜனாதிபதி கதிரையில் அமர்வது இதுவே முதல் முறையாகவும் இருக்கும். அத்தோடு, ரணில் விக்ரமசிங்க, பதில் ஜனாதிபதியதாக பதவி ஏற்றுக்கொண்டால் சுமார் 28 வருடங்களுக்கு பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படுவார். 1994 ஆம் ஆண்டே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அதற்கு பின்னர் இதுவரை யாரும் ஜனாதிபதி பதவிக்கு தெரிவுசெய்யப்படவில்லை.

---

### ஜனாதிபதி கோட்டா பதவி...

அத்தோடு, ஜனாதிபதி பதவி விலகியதுடன், அனைத்து கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களும் பொது இணக்கப்பாட்டுக்கு அமைய ஜனாதிபதி ஒருவரை நியமிக்க வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் தகுதியான ஒருவரை நாங்கள் முன்வைப்போம். அதற்கு அனைத்து கட்சித் தலைவர்களும் வழிவிட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் நேற்று (12) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முழு நாட்டு மக்கள் எதிர்பார்த்ததன்படி, நாளை (இன்று) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னுடைய பதவியிலிருந்து விலகுவார் என்ற பாரிய நம்பிக்கை எங்கள் அனைவரிடமும் இருக்கின்றது. நாளை (இன்று) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகியதுடன், புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்படுவதன் ஊடாக முழு நாட்டு மக்களின் கோரிக்கையும் போராட்டங்களினால் இணைந்து கோரப்பட்ட கோரிக்கையும் நிறைவேறும் என நாங்கள் முழுமையாக நம்புகின்றோம்.

ஜனாதிபதி பதவி விலகியதுடன், காலிமுகத்திடலில் இதுவரை அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மற்றும் செயற்படும் இளைஞர் யுவதிகளுடன் முழு நாட்டு மக்களும் தங்களுடைய கோரிக்கைகள் அவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என ஏதோவொரு வகையில் நிம்மதியடைய முடியும். எனவே, ஜனாதிபதி பதவி விலகியதுடன், தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறிய பின்னணியில், தற்போது மக்களின் பொறுப்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை போன்ற தேசிய சொத்துக்களை விடுவிக்க வேண்டியுள்ளது. எது எவ்வாறாயினும் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகவுள்ள நிலையில் பாதுகாப்பு உறுதிபடுத்தப்படும் என நம்ப முடியாது. மக்களே பாதுகாப்புக்கு பொறுப்பாகவுள்ளனர். எனினும்,இந்த தேசிய சொத்துக்களை சேதமாக்குவதால் எதிர்காலத்திலும் பாதுகாப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் பாரிய நெருக்கடி ஏற்படும். சில நேரங்களில் சூழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படலாம். எனவே, நாளை (இன்று) ஜனாதிபதி பதவி விலகிய கையுடன் குறித்த தேசிய சொத்துக்களை பாதுகாப்பு தரப்பு பொறுப்பேற்றுக்கொள்ளும் வகையில் செயற்படுமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோன்று, இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் போது, அரசியல் கட்சிகள் மற்றும் இந்த செயற்பாட்டாளர்களும் தேசிய நலநன அடிப்படையாகக் கொண்டு, ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் செயற்பட வேண்டும்.

மேலும், கட்சிப் போராட்டத்தையும் அதிகார போராட்டத்தையும் நிறுத்துமாறு அனைத்து கட்சி உறுப்பினர்களிடமும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றோம். பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக நிர்வாக பணிகளை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஒருவரை நியமிப்பது அத்தியாவசியமானது. ஜனாதிபதியின் அடுத்த பதவி காலத்தில் இவை நடைமுறைப்படுத்தப்படும். ஜனாதிபதியை நியமிக்கும் போது, உங்களால் பொது இணக்கப்பாட்டுககு வர முடியாவிட்டால், தகுதியான நபர் ஒருவரை முன்வைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தலைமைத்துவத்துக்கு நாங்கள் முன்வைக்கும் சிவில் உறுப்பினருக்கு இடம்கொடுப்பதற்காக தேசிய பட்டியலிலிருந்து ஐந்து பேர் பதவி விலக வேண்டும். அதில், நாடாளுமன்றத்திற்கும் கட்சித் தலைவர்களுக்கும் பொறுப்புள்ளது. பின்னர், குறித்த இடங்களுக்கு பொருத்தமான, தகுதியான சிவில் உறுப்பினர்களை நியமிப்பதற்கு எங்களால் முடியும். இதற்கான வாய்ப்பை வழங்குமாறு அனைத்து கட்சித் தலைவர்களிடமும் நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

---

### அமெரிக்கா செல்வதற்குப்...

***யோ.தர்மராஜ்***

மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஜூன் 9ஆம் திகதி தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலியிருந்து விலகிய முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, பண்டாரநாயக்க, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவிற்கு செல்ல முற்பட்ட போது, பயணிகள் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் எதிர்ப்பினால் விமான பயணத்தை நிறுத்திவிட்டு, மீண்டும் வீடு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தினால் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டதால், நாடாளுமன்ற பதவிலிருந்து விலகி அரசியல் செயற்பாடுகள் ஈடுபட்டுக்கொண்டிருந்த பெசில் ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறுவதற்கு தீர்மானித்து, அமெரிக்கா, வொஷிங்டன் நகருக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்.

அதற்கமைய, நேற்று அதிகாலை, பண்டார நாக்க, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் திலிருந்து டுபாய் நகருக்குச் சென்று அங்கிருந்து அமெரிக்கா, வொசிங்டன் நகரத் திற்குச் செல்வதற்கு முயற்சித்திருந்தார்.

இங்கிருந்து டுபாய் நகருக்குச் செல்வதற்காக நேற்று அதிகாலை 3.15 மணிக்கு விமான நிலையத்திலிருந்து புறப்பட தயாராக இருந்த ஈ.கே 649 என்ற எமிரேட்ஸ் விமானத்தில் விமான சீட்டை பெற்றுக்கொண்டிருந்தார். பின்னர், டுபாய நகரிலிருந்து நாளை அதிகாலை 2.25 மணிக்கு வொசிங்டன் நகருக்கு புறப்படவிருந்து ஈ.கே 231 என்ற விமானத்தில் அமெரிக்காவிற்குச் செல்லவும் விமான சீட்டை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், நாட்டிலிருந்த நேற்று அதிகாலை வெளியேறுவதற்காக விமான நிலையத்திலுள்ள பிரமுகர்கள் அறையில் காத்திருந்தார். இதன் போது, எமிரேட்ஸ் விமானத் தில் செல்வதற்காக ஆவணங்கள் பரிசீலிக்கும் நிலையத்தில் காத்திருந்த பயணிகளால் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பண்டாரநாயக்க, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், பயணிகள் அனுமதி முனையத்தின் பணிகளில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக, இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கம் அறிவித்தது.

குறிப்பாக, நாட்டில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற மற்றும் நெருக்கடி நிலை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அரசியல் பிரமுகர்கள் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்த பிரமுகர்கள் அனுமதி முனையத்தை பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறுவதற் கான சாத்தியக்கூறுகள் இருப்பதால், அதனை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட் டுள்ளதாக இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கே.ஏ.ஏ.எஸ் கனுகல அறிக்கையின் ஊடாக தெரிவித்துள்ளார்.

அதன்படி, நேற்று நள்ளிரவு 12.00 மணியுடன் பயணிகள் அனுமதி முனையத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதோடு, முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் பயணச்சீட்டு ஆவணங்களை பரிசீலிப்பதற்கு அதிகாரிகள் மறுப்பு தெரிவித்ததோடு, கடும் எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளனர். இதனால், தன்னுடைய விமான பயணத்தை இடைநிறுத்திவிட்டு மீண்டும் வீடு நோக்கி திரும்பும் நிலைமை ஏற்பட்டதால், நாட்டை விட்டு வெளியேற பெசில் ராஜபக்ஷ முன்னெடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

# தனியார் பஸ் சங்கத்தினரின் போராட்டத்தால் மன்னாரில் போக்குவரத்துத் தடை

## நிலைமையை சீர்செய்த பிரதேச மக்கள்









(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் நேற்று (12) காலை முதல் மன்னார் தனியார் பஸ் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டனர்.

அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்களினூடாக வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மக்களுக்கும் தனியார் பஸ் சங்கத்தினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டதோடு, அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில், தனியார் பஸ்களை வீதியின் இடை நடுவில் நிறுத்தியமைக்கு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியதோடு, குறித்த தனியார் பஸ்களை அவ்விடத்தில் இருந்து அகற்றி அரச போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் சுமுகமான போக்குவரத்துச் சேவையை முன்னெடுத்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நீண்ட நேரம் பேருந்துக்காக காத்திருந்த மக்கள் கொதிப்படைந்த நிலையில் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு, அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் வீதியை மறித்து தரித்து நின்ற தனியார் பஸ்களை அகற்ற முயற்சி செய்தனர்.

பின்னர் மக்கள் குறித்த பஸ்களை அவ்விடத்தில் இருந்து அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பின்னர் குறித்த தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் குறித்த பஸ்களை அவ்விடத்தில் இருந்து எடுத்துச்சென்றனர். அதனை தொடர்ந்து நீண்ட நேரத்தின் பின் அரச போக்குவரத்துச் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றது. எனினும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் பொது மக்களை பாதிக்காத வகையில் முன்னெடுத்திருக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட டீசலில் மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பஸ்களுக்கும் வழங்குமாறு உரிய தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மையில் வழங்கப்பட்ட டீசலில் தற்போதுவரை 2413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் அதனைத் தொடர்ந்து டீசல் எவையும் தனியார் பேருந்துகளுக்கு வழங்கவில்லை. தனியார் பேருந்துசங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த 5ஆம் திகதி காலை தனியார் பஸ்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு, அரச போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாத வகையில் தனியார் பஸ்களினால் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதோடு, தமக்கான எரிபொருளையும் வழங்க கோரிக்கை விடுத்தனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சிறிது நேரம் முழுமையாக பாதிக்கப்பட்டதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர். இந்நிலையில், மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலில் பிரதேசச் செயலாளர், இராணுவம், பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்து சபையின் எண்ணெய்க் குதங்களில் இருந்து தனியார் பேருந்து சேவை பஸ்களுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டிற்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும், 13,200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லிட்டர் டீசல் தனியார் பஸ்களுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. நேற்று முன்தினம் (11) கிடைக்கப்பெற்ற எரிபொருள் தனியார் பஸ் சங்கத்தினருக்கு பகிர்ந்து வழங்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினரிடம் அவர்கள் வினவியபோதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.இந்த நிலை நேற்று (12) காலை முதல் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் போக்குவரத்து சேவையை இடைநிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று (12) காலை முதல் வீதி மறிப்பு உட்பட பொதுமக்கள் பாதிக்கப்படும் வகையில் மன்னார் பஸார் பகுதியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற போதும் அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இடம்பெற்ற பிரச்சினைகளை வேடிக்கை பார்த்தோடு, தடுக்க முயற்சிகள் எவையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்து நடுக்கடலில் சிக்கிக்கொண்ட 55 இலங்கையர்கள்





ஹம்பாந்தோட்டையிலிருந்து தென்கிழக்கு திசையில் சுமார் 390 கடல் மைல் தொலைவிலுள்ள ஆழ்கடல் பகுதியில் கடும் காற்றில் சிக்கி தவித்த நீண்டநாள் மீன்பிடி படகிலிருந்த, சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு சென்றதாக சந்தேகிக்கப்படும் 55 பேரை மீட்க கடந்த 10ஆம் திகதி கடற்படையினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். அவர்கள் நேற்று (12) ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, இலங்கையின் தென்கிழக்கு பகுதியில் ஆழ்கடலில் விபத்துக்குள்ளான நிலையில் நீண்டநாள் மீன்பிடி படகொன்று இருப்பதாக, கடல் மற்றும் கடல் வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கடந்த 08ஆம் திகதி கடற்படை தலைமையகத்திலள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலுக்கிணங்க உடனடியாக செயற்பட்ட கடற்படையினர் அவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் ஆட்கடத்தல்காரர்கள் ஐவர் உட்பட 46 ஆண்கள், மூன்று பெண்கள், மற்றும் ஆறு குழந்தைகள் உள்ளிட்ட 55 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களை உடனடியாக கரைக்கு அழைத்து வர கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 03 - 54 வயதுகளையுடைய திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் கற்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். மேலும், பாதுகாப்பற்ற மற்றும் பாழடைந்த மீன்பிடி படகுகளை பயன்படுத்தி ஆட்கடத்தல்காரர்களால் திட்டமிட்டு நடத்தப்படும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் சிக்காமல் இருக்குமாறு பொதுமக்களை கடற்படை கேட்டுக்கொண்டுள்ளது.

# கர்ப்பிணிகள் - சுற்றுலா பயணிகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்க பாதுகாப்புப் பிரிவினர் ஒத்துழைப்பு

(பீ.எம்.முக்தார்)

பேருவளை ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் நேற்று முன்தினம் (11) வரிசையின்றி எரிபொருள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

வாகனங்களினதும், மோட்டார் சைக்கிள் களினதும் உரிமையாளர்கள் தமது வாகனங் களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள பல நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்த நிலையில், மனிதாபிமான அடிப்படையில் பேருவளை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து இவர்களுக்கு வரிசையின்றி எரிபொருளை பெற்றுக்கொடுக்க உதவி செய்துள்ளனர்.

சிகிச்சைக்காக செல்லும் கர்ப்பிணி தாய்மார்கள், வெளிநாடுகளிலிருந்து எமது நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டவர்களுக்கு இவ்வாறு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டது. எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர், பொலிஸார், இராணுவத்தினருக்கு இது குறித்து அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயம்!

கொழும்பு கடலோர பொலிஸ் பிரிவில் புதிய ஹெட்டிவீதி ஹிந்தி அப்புஹாமி சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தம்பதியினர் மீது நேற்று (12) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

'கிம்புலா எல பிரதீப்' என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பிஸ்டோலுக்கு பயன்படுத்தப்படும் வெற்று ரவைகளும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூடு நடத்திய நபர், மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் செல்வது அங்கு பொறுத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாயுள்ளது.

# எரிபொருள் நெருக்கடியால் மாணிக்கக்கல் வியாபாரிகளுக்கு பெரும் பாதிப்பு

( பீ.எம். முக்தார் )

பேருவளை பகுதியிலிருந்து இரத்தினக் கல் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இரத்தினபுரி, நிவிதிகலை, பலாங்கொடை, பெல்மதுள்ளை, கஹவத்த போன்ற பிரதேசங்களுக்கு சென்ற இரத்தினக்கல் வர்த்தகர்கள் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்பமுடியாத நிலையில் அவ்வப் பகுதிகளில் தங்கியிருப்பதாக தெரியவருகிறது.

தமது சொந்த வாகனங்களில் வேறு வழியிலிருந்து எரிபொருள் பெற்றுக்கொண்டு சென்றுள்ள பல வர்த்தகர்கள் மேற்குறிப்பிட்ட இடங்களில் மீண்டும் எரிபொருள் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில், தொடர்ந்தும் அங்கு தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தமது வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ள அங்கு கியூ வரிசையில் பல வர்த்தகர்கள் காத்திருக்கும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கூடிய விலை கொடுத்தேனும் எரிபொருள் பெற்று தமது வீடுகளுக்கு வர முயற்சித்துள்ள போதிலும் அதுவும் கைகூடவில்லையாம். வாகனங்களை பாதுகாப்பான இடங்களில் நிறுத்தி வைத்துவிட்டு இரத்தினக்கல் வர்த்தகர்கள் புனித ஹஜ்ஜுப் பெருநாளைக்காக வேறு வழிகளில் தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். போதிய அளவு பஸ் சேவைகளும் இல்லாத நிலையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலேயே வீடு வந்து சேர்ந்துள்ளனர்.

தினமும் பெருமளவிலான இரத்தினக்கல் வர்த்தகர்கள் இரத்தினபுரி மாவட்டங்களில் இருந்து பேருவளைக்கும் பேருவளையிலிருந்து அப்பகுதிக்கும் வியாபார நிமித்தம் வாகனங்களிலும், முச்சக்கரவண்டிகளிலும், பஸ்களிலும், மோட்டார்சைக்கிள்களிலும் பயணம் செய்து வருவதோடு, எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக வியாபார நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அனுமதிப்பத்திரம் பெற்று இரத்தினக்கல் வியாபாரம் செய்வோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்தினால் தமது வாகனங்களுக்கு எரிபொருளை பெற்று வியாபாரத்தை இடையூறின்றி முன்னெடுக்க முடியும் என வர்த்தகர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் ஒரு வியாபாரமாக இரத்தினக்கல் வியாபாரம் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை ஏற்றுக்கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாது

## யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டு

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை ஏற்றுக்கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாதென யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்திற்கு பின்னர் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில், வடக்கு கிழக்கிலே ஊடக அடக்குமுறை என்பது கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. வடகிழக்கிலே 39 ஊடகவியலாளர்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன. கணிசமான ஊடகவியலாளர்கள் அச்சம் காரணமாக நாட்டை விட்டுவெளியேறி இருக்கின்றார்கள். இந்த நேரம்வரை ஊடகத்துறை என்பது ஒரு நெருக்கடியான துறையாகவே காணப்படுகின்றது. இந்த நிலையில் தான் கொழும்பில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் மீண்டும் பதிவாகியுள்ளது.

வடகிழக்கு ஊடகவியலாளர்களுக்கு பரீட்சயமாக இந்த தாக்குதல்கள் காணப்பட்டாலும் கொழும்பில் அது மீண்டும் எதிரொலிக்கிறது.

இந்த நிலையில் வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான காணாமலாக்கல், படுகொலைகள், அச்சுறுத்தல்கள் போன்ற செயற்பாடுகளை நாங்கள் எவ்வாறு கண்டித்தோமோ தற்பொழுது கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலையும் ஏற்றுக்கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாது.

அந்தவகையில் எமது கடுமையான கண்டனத்தை தெரிவிப்பதோடு, தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும். தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அனைத்து மட்ட பிரச்சினைகளிலும் எமது யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நீண்டகாலமாக செயற்பட்டு வருகிறது.

அந்த வகையில் இச்செயற்பாடுகளின் போது ஊடகங்களினுடைய பங்களிப்பும் எமது கலைப்பீட மாணவர் ஒன்றியத்தோடு பின்னிப்பிணைந்ததாகவே காணப்படுகிறது.

ஆகவே இனிவரும் காலங்களில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதோ அச்சுறுத்தப்படுவதோ தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அதனை அரச நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதனை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் வலியுறுத்தி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.







ஜனாதிபதியின் அலுவலகம் மக்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதை அடுத்து, ஜனாதிபதி செயலகத்தை பார்வையிடுவதற்காக மக்கள் நேற்றும் (12) வருகை தந்திருந்தனர். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜுலை 13ஆம் திகதி, புதன்கிழமை

# அரசியல் இருப்பை தக்கவைக்க முயற்சி!

உலகம் முழுவதும் இலங்கை தொடர்பான கருத்தாடல்கள் வலுப்பெற்று வருகின்றன. ஒருபுறம் பொருளாதார நெருக்கடியால் மக்கள் எதிர்கொண்டுள்ள சவால்கள், மறுபுறம் அரசியல் நெருக்கடியால் நாடு சந்தித்திருக்கும் பின்னடைவு குறித்தான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றன.

நாட்டின் தற்போதைய தேவை, பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை காப்பாற்றுவதாகும். அதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடந்த ஜூலை 09 ஆம் திகதி இடம்பெற்ற போராட்டத்தின் பின்னர் பதவி விலகுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அவருடைய அறிவிப்பை சபாநாயகர் ஊடாக இன்று வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பதவிக்காக காத்திருந்தவர்கள் போலவும், மக்கள் போராட்டத்துக்கு காரணகர்த்தாக்கள் போலவும் அரசியல் தலைவர்கள் பலர் முண்டியடித்துக்கொண்டு ஜனாதிபதி கதிரையை அலங்கரிக்க போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் நிலைமையை ஐந்து வருடங்களுக்குள் மாற்றுவோம், ஆறு மாதங்களில் மாற்றுவோம் என மார்தட்டிக்கொண்டவர்கள் அதற்கான காத்திரமான திட்டங்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியிலும் வெறும் வாய்ச்சவடால்களால் கடந்த கால ஆட்சியாளர்களையும், எதிரணியினரையும் குற்றஞ்சுமத்தி மாத்திரமே அரசியல் செய்துவந்தவர்களுக்கு தற்போது பதவி ஆசை மேலிட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ ஏற்கனவே அறிவித்துள்ளதன் பிரகாரம் பதவி விலகும் பட்சத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டவும், எதிர்வரும் 20 ஆம் திகதி பதில் ஜனாதிபதிக்கான இரகசிய வாக்கெடுப்பை நடத்தவும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாடாளுமன்றத்தைக் கூட்டியவுடன் பதில் ஜனாதிபதிக்கான பெயர் பரிந்துரைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, மறுநாள் 20 ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் பதவி விலகுமாறு போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும், நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பொறுத்தே தீர்மானங்கள் அமையப்பெறும்.

இந்த நிலையில், யார் ஜனாதிபதி? யார் பிரதமர்? என்று கட்சித் தலைவர்களுக்கிடையே போட்டி நிலவுகிறது. ஒருபுறம் சஜித் பிரேமதாச, தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கத்தை வழிநடத்தத் தயார் என அறிவித்துள்ளார்.

இடைக்கால ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நியமிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மறுபுறம், மக்கள் ஆணை இல்லாதபோதிலும் பொறுப்புகளை ஏற்று சவாலை வெற்றிகொள்ளத் தயார் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலர் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், சரத் பொன்சேகாவின் பெயரை பரிந்துரைத்தால் என்னவென்பது போன்ற பேச்சுகளும் மறைமுகமாக இடம்பெறுகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி விலகுவாராக இருந்தால் அரசியலமைப்பில் உள்ள சாதகத்தன்மையைப் பயன்படுத்தி ஜனாதிபதியாகும் வாய்ப்பை பயன்படுத்துவதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

நாட்டில் மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் அமைச்சரவை கலைந்தது. அப்போது அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக சர்வகட்சிகளின் ஒத்துழைப்புடன் பிரதமர் பதவியை ஏற்க முன்வருமாறு ஜனாதிபதியால் பொதுவான அழைப்பு விடுக்கப்பட்டது.

அதனை ஏற்பதற்கு யாரும் முன்வராத நிலையிலேயே ரணில் விக்ரமசிங்க சவாலை ஏற்றுப் பிரதமரானார். நாடு எதிர்கொண்டுள்ள நிலைமை, எதிர்கொள்ளப்போகும் பிரச்சினைகள், அந்நிய செலாவணி கையிருப்பு, கடன் மீள செலுத்துகையில் உள்ள சவால்கள் உள்ளிட்டவை குறித்து அவர் நாடாளுமன்றத்தின் ஊடாக மக்களைத் தெளிவுபடுத்தினார்.

அப்போதும், அனைத்து கட்சிகளும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற கோரிக்கை அவரால் முன்வைக்கப்பட்டது. எனினும், அதற்கு எத்தனை பேர் சாதகமான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள் எனக் கேட்டால் பதில் கிடையாது.

ஆனால், இப்போது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பலமுனைப் போட்டிகள் இடம்பெறுகின்றன. அந்த அதிகாரத்தின் ஊடாக எவ்வாறான திட்டங்களை முன்வைக்கப்போகிறார்கள் என இந்தப் போட்டியாளர்கள் யாரும் இதுவரை கூறியதில்லை.

ஆக, மக்களை மீண்டும் பாதாளத்துக்குள் தள்ளும் வகையிலும், அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ளவுமே இந்த நாடகங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன என்பது மட்டும் தெளிவான உண்மை.

# ஜனாதிபதி மாளிகை முற்றுகைக்குப் பிறகு நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் அவசரம் தேவை



இலங்கை வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான ஜுலை 9 கொந்தளிப்பான நிகழ்வுகளுக்கு பிறகு சஞ்சலமான ஓர் அமைதி நிலவுகிறது. ஜனாதிபதி செயலகமும், ஜனாதிபதி மாளிகையும், பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையும் ஆட்சியாளர்களின் கைகளில் இல்லை, பதிலாக மக்களின் கைகளில் இருக்கின்றன. இந்த அரச கட்டடங்களை ஆக்கிரமித்திருக்கும் 'அறகலய' போராட்டக்காரர்கள் அங்கு அரச உடைமைகளைப் பாதுகாப்பதற்காக நிலைவைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் படைகளுடன் சகவாழ்வு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசின் பிரதிபலிப்பு கடுமையானதாக இருக்காது என்று ஜுலை 9 ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்களுக்கு உண்மையில் ஒரு நம்பிக்கை இருந்தது. பாதுகாப்புப் படைகளும் மதிக்கக்கூடிய தேசிய இலட்சியம் ஒன்றின் அங்கமாகவே ஆர்ப்பாட்டங்களில் தாங்கள் பங்கேற்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டங்களை முறியடிக்க சட்டமுறைமையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பயன்தராமல் போனதால் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கக்கூடும். ஆர்ப்பாட்டங்களின் பரப்பெல்லைகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் கோரிய அனுமதியை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. பொலிஸார் தங்களது அடுத்த தெரிவாக கொழும்பு மாவட்டத்திலும், சுற்றுப்புறங்களிலும் ஊரடங்கைப் பிறப்பித்தார்கள். அதுவும் கூட பயன்தரவில்லை. பொலிஸ் ஊரடங்கு சட்டவிரோதமானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உடனடியாகவே வாதிட்டது. அதனை ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு, நேரடியான வழிவகைகளின் ஊடாக ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த முயற்சித்த பொலிஸ் அது சரிவராமல் போகவே ஊரடங்கைப் பிறப்பித்து மறைமுகமான வழிவகைகளின் ஊடாக முயற்சித்து பார்க்கிறது என்று சுட்டிக்காட்டியது. எது எவ்வாறிருந்தாலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் எவருடனும் சண்டையிடாமல், மற்றையவர்களின் உரிமைகளையும் மதித்து பெருமளவுக்கு முன்னுதாரணமான முறையில் நடந்துகொண்டார்கள்.

நாட்டின் சகல பாகங்களிலும் இருந்துவந்த இலட்சக்கணக்கான மக்கள் கொழும்பிலும், கடந்த நான்கு மாதங்களாக அரசாங்கத்துக்கெதிரான பிரதான போராட்டக்களமாக விளங்கும் காலிமுகத்திடலிலும் திரண்டு கடந்த சனிக்கிழமை போராட்டத்தை தொடங்கினார்கள். பொதுப்போக்குவரத்து இல்லாத கஷ்டமான சூழ்நிலையில், காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்ததற்கு மத்தியில், இரவோடிரவாக தற்காலிக போக்குவரத்து ஏற்பாடுகள் மூலமாகவும், நடையாகவும் மக்கள் கொழும்பை வந்தடைந்தார்கள். ஆனால், காலையில் பொலிஸ் ஊரடங்கு நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஐரோப்பா உட்பட உலகின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களுக்காக ஆயிரக்கணக்கில் மக்கள் திரளும்போது குடிவெறியில் கலகங்களும், சூறையாடல்களும் இடம்பெறுவதை ஊடகங்கள் மூலமாக நாம் அறிந்திருக்கிறோம். அதற்கு முற்றிலும் வேறுபட்ட முறையில் அன்றைய தினம் கொழும்பில் அமைதியான முறையில் கூடியதை காணக்கூடியதாக இருந்தது.

## கொண்டாட்ட சூழ்நிலை

வெளியிடங்களில் இருந்து கொழும்புக்கு மக்கள் இடர்பாடுகளுக்கு மத்தியில் பயணம் செய்த உடல் உபாதைக்கு மத்தியிலும் பெரும்பாலும் அன்றைய தினம் காலையில் மக்கள் மத்தியில் கொண்டாட்ட சூழ்நிலை காணப்பட்டது. சக்கர நாற்காலிகளில் வயோதிபர்கள், பெற்றோர் தூக்கிவைத்திருக்கும் குழந்தைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்று பலதரப்பு மக்களும் தேசியக்கொடியை ஏந்தியவண்ணம் போராட்டக்களத்துக்கு அமைதியாக வந்துசேர்ந்தனர். மே 9 பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷவை விலகச் செய்த போராட்டங்களின் ஆரம்ப நாட்கள் போன்று நிலைமை இருந்தது. மாற்றம் ஒன்றும் ஏற்படாத நிலையில், அண்மைய வாரங்களாக போராட்டங்களில் மக்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி இருந்தது. ஆனால், சனிக்கிழமை நிலைமை மாறியது. "கோட்டா வீட்டுக்குப் போ" என்ற பொதுவான சுலோகத்துக்கு மத்தியில் வேறு சுலோகங்களும் காணப்பட்டன. ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகும் தீர்மானத்தை முன்கூட்டியே எடுத்து கௌரவமான முறையில் வெளியேறியிருந்தால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையை தவிர்த்திருக்க முடியும்.

அதற்கு பிறகே ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகை முற்றுகை இடம்பெற்றது. கண்ணீர்ப் புகைக்குண்டு பிரயோகம் இடம்பெற்றது. வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இதில் சிலர் கடுமையாக காயமடைந்தனர். ஆனால், இத்தகைய தாக்குதல்களினால் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் முன்னரங்கத்தில் நின்ற போராட்டக்காரர்களின் உத்வேகத்தை தடுக்கமுடியவில்லை. ஜனாதிபதி மாளிகையின் வாயிற்கதவுகள் முன்பாக ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். இறுதியில் பாதுகாப்புப் படையினர் பின்வாங்கவேண்டி ஏற்பட்டது. மதில்களால் ஏறிக்குதித்த மக்கள் மாளிகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நாட்டின் ஆட்சியாளர்கள் அனுபவித்த வரப்பிரசாதங்களையும், ஆடம்பரங்களையும் பார்த்து வியப்படைந்தனர். அவற்றையெல்லாம் வீடியோ எடுத்த மக்கள் நீச்சல் குளத்தில் குதித்து மகிழ்ந்தனர்.

அடுத்தது என்ன என்பதே கேள்வி. தேசிய மட்டத்தில் ஊழல் இல்லாததும், சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்றதுமான அர்த்தமுடைய அரசியல் மாற்றம் ஒன்றுக்கு பங்களிப்பு செய்யக்கூடிய பக்கச்சார்பற்றவர்களின் அமைதிவழிப் போராட்டமாகவே 'அறகலய' தொடரவேண்டியது அவசியமாகும். தற்போதைய நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசியல் உறுதிப்பாடும், பொருளாதாரத் திட்டமும் தேவை. ஆனால், அரசாங்கத்திற்குள் உட்பூசல்கள் நிறைந்துள்ளன. எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு சர்வதேச சமூகம் ஆதரவாக இல்லை. விலைவாசி அதிகரித்துக்கொண்டே போகிறது. எரிபொருட்கள், மருந்துவகைகள், உணவு மற்றும் டொலர்களுக்கான தட்டுப்பாடு தொடர்கிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்னால் மக்கள் கிலோ மீற்றர் கணக்காக வரிசையில் இரவுபகலாக காத்துக் கிடக்கிறார்கள். இந்த அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியமும், நேச நாடுகளின் அரசாங்கங்களும் நிபந்தனையுடனான ஆதரவையே தர முன்வருகின்றன. மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியதையடுத்து, அந்த பொறுப்பை விக்ரமசிங்க கையேற்று இரு மாதங்கள் கடந்த பின்னரும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைக் காணவில்லை.

ஜுலை 9 பிரம்மாண்டமான மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரும் அரசியல் மாற்றத்துக்கான உத்தரவாதம் இன்னமும் இல்லை. ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் அலரி மாளிகை எல்லாம் போராட்டக்காரர்களின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கின்றன. ஜனாதிபதியும், பிரதமரும் பதவியில் இருந்து இறங்கும்வரை போராட்டக்காரர்கள் அந்த கட்டடங்களில் தொடர்ந்தும் தங்கியிருக்க உத்தேசித்திருக்கிறார்கள். ஜனாதிபதி ஜுலை 13 இல் பதவி விலகுவதாக அறிவித்திருக்கிறார் என்று சபாநாயகர் தெரிவித்தார். பிரதமரும் பதவிவிலகுவதாக அறிவித்திருக்கிறார், ஆனால், ஒரு நிபந்தனையுடன். அவர்கள் உண்மையில் பதவி விலகுவார்களா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லும். ஜனாதிபதி உள்நாட்டில் இருக்கிறாரா அல்லது வெளிநாட்டில் இருக்கிறாரா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால், சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை நீக்குவதற்கு முக்கியமான தீர்மானங்களை அவர் எடுக்கிறார் என்று அவரது அலுவலகம் அறிவித்திருக்கிறது. பதவிகளில் இருந்து விலகுவதில் ஜனாதிபதியினதும், பிரதமரினதும் பற்றுறுதி குறித்த குழப்பத்தன்மை காரணமாக சஞ்சலமான அமைதியொன்று நிலவுகிறது.

சாத்தியமானளவு விரைவாக தேர்தல்களை நடத்துவதே ஒரே வழி. தேசியத் தேர்தல்களை மாத்திரமல்ல, பிற்போடப்பட்டிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்தவேண்டும். வளர்ச்சிப் பொருளாதாரத்தை நோக்கிய கடுமையான மாற்றத்துக்கு இலங்கை நகரவேண்டுமென்றால் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய மட்டங்களிலான அரசாங்கங்கள் நாட்டின் சகல பாகங்களிலும் தேவை. ஆட்சி செய்பவர்களுக்கும், ஆளப்படுபவர்களுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாத நிலையில் இலங்கை மேலும் நிலைகுலையும் ஆபத்து இருக்கிறது. அதனால் நடவடிக்கைகளில் அவசரம் தேவை. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வாசஸ்தலம் இரவு வேளையில் தீ வைக்கப்பட்ட சம்பவத்தை சுற்றியுள்ள சர்ச்சை, வெறுப்பு நிறைந்த அரசியலின் வெளிப்பாடாகும். இந்த வெறுப்பு அரசியலில் இருந்து நாடு விடுபடவேண்டியது அவசியமாகும். பிரதமரின் வாசஸ்தலத்துக்கு அண்மையாக பாதுகாப்புப் படையினரால் ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளான சம்பவத்தின் கொடூரம் காணொளிகளில் பதிவாகியிருக்கிறது. மீண்டும் அத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் அவசியம்.

இத்தகைய பின்புலத்தில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற செல்வாக்குமிக்க சிவில் அமைப்புக்கள் ஆட்சிமுறையில் மக்கள் மீண்டும் நம்பிக்கை வைப்பதை உறுதிப்படுத்த நாடாளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும், அடுத்து விரைவாக தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் யோசனைகளை முன்வைத்திருக்கின்றன. இவை நியாயமானவை. ஏனென்றால், கடந்த ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணைகள் வாபஸ் பெறப்பட்டுவிட்டன. அந்த மக்கள்தான் 'அறகலய' போராட்டத்தை ஆதரித்து இன்று அரசாங்க மாளிகைகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஜனாதிபதியுடன் சேர்ந்து 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்கு போகவேண்டும் என்பது மக்களின் இரண்டாவது கோரிக்கை. இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளின் தலைவர்களும் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அன்றி, கட்சிகள் என்ற வகையில் அவர்களின் பிரதிநித்துவ அடிப்படையில் இடைக்கால அரசாங்கம் ஒனறை அமைப்பதே சிறந்தவழியாக இருக்கக்கூடும். அரசியல் சாராத ஒரு தெரிவு என்ற வகையில், சட்டத்தரணிகள் சங்கம் போன்ற சுயாதீனமானதும், மதிப்புக்குரியதுமான சிவில் நிறுவனம் காபந்து அரசாங்கத்தின் தலைமையைப் பொறுப்பேற்கக்கூடியதான ஓர் ஏற்பாடு குறித்தும் ஆராயலாம்.



**கலாநிதி ஜெகான் பெரேரா**

# இன்றைய நாளில்...

- 1844 – இலங்கையில் பொலிஸ்துறை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன.
- 1869 – இந்துப் பிள்ளைகளின் கல்விக்கு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார்.
- 1930 – முதலாவது உலகக்கோப்பை கால்பந்துப் போட்டிகள் உருகுவேயில் ஆரம்பமாயின. லூசியென் லோரென்ட் பிரான்ஸுக்காக மெக்சிகோவுக்கு எதிராக முதலாவது கோலைப் போட்டார்.
- 1971 – மொரோக்கோவில் தோல்வியடைந்த இராணுவப் புரட்சியில் ஈடுபட்ட பத்து இராணுவத்தினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1977 – சோமாலியா, எத்தியோப்பியா மீது போரை ஆரம்பித்தது.
- 1989 – இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1997 – சே குவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபாவுக்குக் கொண்டுவரப்பட்டன.
- 2001 – சீனாவின் பெய்ஜிங் நகரம் 2008க்கான ஒலிம்பிக் விளையாட்டுகளுக்குத் தகுதி பெற்றது.

# நக்கல் நமசிவாயம்

**புதுசா வார ஜனாதிபதி எங்கே இருந்து வேலை செய்யப்போறார்? பாவம் ஒப்பீசும் இல்ல..**



# இந்தியாவினால் வழங்கப்பட்ட உரத்தை பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்தலாம்

## இரசாயன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய உரச் செயலகம் அறிவிப்பு

இந்திய அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப் பட்ட உரத் தொகையை விவசாயத்துக்கு பயன் படுத்திக்கொள்ள முடியுமென தேசிய உரச் செயலாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட உரம் தொடர்பில் மேற் கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், 0.9 சதவீதம் பையூரெட் காணப்படு வதாக தேசிய உர செயலகம் நேற்று முன்தினம் (11) அறிவித்துள்ளது.





இந்த உர தொகை தொடர்பில் தேசிய உர செயலக காரியாலயம் இந்நாட்டு இரசாயன ஆய்வுக்கூடத்தினூடாக தர அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னர், இந்த உரத் தொகை தொடர்பில் 03 சர்வதேச இரசாயன ஆய்வு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஆய்வு அறிக்கைகளில் 0.65 சதவீதம் பையூரெட் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுவாக இலங்கையில் பயன்படுத்தப்படும் யூரியாவில் 1 சதவீத பையூரெட் காணப்படும். இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள யூரியாவில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் நெல் உள்ளிட்ட பயிர்ச்செய்கைகளுக்கு பயன்படுத்துவதில் பிரச்சினை எதுவும் இல்லை எனவும் தேசிய உரச் செயலக காரியாலயம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு அறிவித்துள்ளது.

இந்திய கடனுதவி வேலைத்திட்டத்துக்கமைய 65 ஆயிரம் மெட்ரிக் தொன் யூரியா உரத் தொகையின் முதல் கட்டமாக 44 ஆயிரம் மெட்ரிக் தொன் உரம் கடந்த 09ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.

இந்த உரத்தொகை கடந்த 10ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இலங்கைக்கு கையளிக்கப்பட்டது. இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வினால் இந்த உரத்தொகைக்கான ஆவணங்கள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர்,

நெருக்கடி நிலைமையை சந்தித்துள்ள இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இந்திய அரசாங்கத்தினால் யூரியா உரம் பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி கோட்டா விமானப்படை தளபதிக்குரிய வீட்டிலிருப்பதாக வெளியாகும் தகவல் போலியானது

### ஊடகப்பிரிவு விளக்கம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு செரந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் எந்த உண்மைத் தன்மையும் இல்லை எனவும், அதனை முற்றாக மறுப்பதாகவும் விமானப்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள விமானப் படை ஊடகப்பிரிவு, அதில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவுக்கு சொந்தமான பிரத்தியேக இல்லமொன்றில் தங்கியிருப்பதாக முன்னாள் பொலிஸ் அதிகாரியான அஜித் தர்மபாலவினால் வெளியிடப்பட்ட குரல் பதிவொன்று சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இந்த குரல் பதிவில் குறிப்பிடப்படும் எந்தவொரு விடயமும் உண்மையில்லை.

இது விமானப்படை மற்றும் விமானப்படை தளபதிக்கு இழிவை ஏற்படுத்தும் வகையிலான செயலாகும்.

விமானப்படைக்கு எதிராக பொது மக்கள் மத்தியில் வைராக்கியத்தையும் குரோதத்தையும் ஏற்படுத்தும் சந்தர்ப்பவாத நோக்கிலான செயற்பாடு எனவும் விமானப் படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய தீ மிதிப்பு நிகழ்வு இன்று



(உடப்பு நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க முந்தல் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய மகோற்சவத்தின் தீ மிதிப்பு நிகழ்வு இன்று (13) இரவு 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள், தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 18 நாட்களாக இடம்பெற்றுவரும் இவ்விழா முழுக்க முழுக்க மகா பாரதக் கதையை நினைவுபடுத்தும் ஒரு விழாவாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இரவு 8 மணியளவில் இடம்பெறும் தீமிதிப்பில் முதலில் பூசகர் குழந்தைவேல் சுரேந்திரன் தனது அக்கினிக் கரகத்துடன் முதற்பாதத்தை வைத்து தீ மிதிப்பார். அதன் பின்னர் பக்த அடியார்கள் ஒவ்வொருவராக தீ மிதிப்பில் கலந்துகொண்டு தீ மிதிப்பார்கள். இந்நிகழ்வு சுமார் 40 நிமிடங்கள் இடம்பெறும்.

## ஆழ்கடலில் விபத்துக்குள்ளான மீனவர்கள் மூவர் மீட்பு





மஹா இராவணன் கலங்கரை விளக்கத்திலிருந்து 174 கடல் மைல்கல் தொலைவில் இலங்கைக்கு தென் கிழக்கு திசையின் ஆழ்கடல் பகுதியில் விபத்துக்குள்ளான மீன்பிடி படகில் உயிர் அச்சு றுத்தலுக்குள்ளான மீனவர்கள் மூவர், கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் ஒருங்கிணைந்து, பாதுகாப்பாக நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் 03 மீனவர்களுடன் மீன்பிடி நடவடிக்கைக்கு வெளியேறிய IMUL – A-0301 MTR என்ற மீன்பிடிப் படகே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக மீன்பிடி மற்றும் நீர்வள பாதுகாப்பு திணைக்களத்தினால் கடற்படை தலைமையகத்திலுள்ள கொழும்பு, கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவுறுத்தலுக்கு உடனடியாக செயற்பட்ட கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மைய அதிகாரிகள் அவர்களை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த விபத்திலிருந்து மீட்கப்பட்ட மூவரையும் காலி துறைமுகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

## குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு பூட்டு

எரிபொருள் பிரச்சினையின் காரணமாக குருநாகல் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவை மூடுவதற்கு அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தங்கி சிகிச்சை பெறும் நோயா ளர்களுக்கு மாத்திரம் சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக வைத்தியசாலையில் நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தயாநந்த பண்டார கருத்து தெரிவிக்கையில்,

வைத்தியசாலையின் நடவடிக்கைகள் தற்போது வரையறுக்கப்பட்டுள்ளன. தங்கி சிகிச்சைப்பெற்று வரும் நோயாளர்களுக்கு மாத்திரமே சிகிச்சை வழங்கப்படுகிறது. எரிபொருள் பிரச்சினை பாரதூரமான சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 90 சதவீதமான விசேட வைத்திய நிபுணர்கள் இந்த மாகாணத்தைச் சேரந்தவர்கள் அல்ல.

அநேகமானவர்கள் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவ்வாறு இல்லாவிட்டால் கொழும்பிலிருந்தும் கடமைக்காக வைத்தியர்கள் இங்கு வருகிறார்கள்.

நாங்கள் கடமைகளுக்கு பஸ் அல்லது புகையிரதத்திலேயே கடமைக்கு வருகிறோம். கடமைக்கு வந்து ஒரு வாரத்துக்கு மேலாக எங்களால் வீட்டுக்கு மீண்டும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடி, வியாழன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லாத நிலை நிலவுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரி கைது!

நாட்டில் கடந்த 09ஆம் திகதி மஹரகமவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் இணைந்துகொண்ட பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்த பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் (11) அதிகாலை காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் வைத்தே கோட்டை பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிகாரி பொலிஸ் போக்குவரத்து பிரிவில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவர் ஆவார். அதிகாரி பொலிஸ் சீருடையுடன் காலணிகளை அணிந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அங்கு தங்கியிருந்தமையினால் கைது செய்யப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவருக்கு பொலிஸார் பிணை வழங்கி விடுவிக்கப்படுவார் என்றும் அந்த உயர் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.


எனினும், பொலிஸ் தலைமையகம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

## பிரதமர் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருட்டு









அலரிமாளிகையின் ஊடகப்பிரிவிலிருந்த உபகரணங்கள் திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடகப் பிரிவிலிருந்த இரு மடிக்கணினிகள், ஒளிப்பதிவு கெமரா மற்றும் மேலுமொரு கெமரா என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட் டதன் பின்னர் அலரிமாளிகைக்கு செல்லவில்லை என்பதுடன், பிரதமர் ஊடகப்பிரிவில் மாத்திரம் அலரிமாளிகையின் வளாகத்தில் தனியாக கட்டட மொன்று நிர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் நுழைந்ததன் பின்னரே இந்த உபகரணங்கள் காணாமல்போயுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையின் சுவர், கதவு என்பவற்றை உடைத்து, அங்கிருந்த ஆவணங்கள் அழிக்கப் பட்டுள்ளதாக பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.







கடந்த 9ஆம் திகதிய மக்கள் எழுச்சிப் போராட்டத்தினால் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், ஜனாதிபதியின் அலுவலகம் மற்றும் பிரதமரின் அலரிமாளிகை என்பன மக்கள் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. அந்த வகையில் நேற்றும் (12) அலரிமாளிகையை மக்கள் பார்வையிடுவதற்காக வந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை இளைஞர்கள் உணவு சமைப்பதையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 12.07.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 127 15 8 | 138 6 01 |
| கனேடியன் டொலர் | 161 76 3 | 174 251 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0703 | 44 1514 |
| யூரோ | 245 0234 | 26 6 46 |
| ஜப்பான் யென் | 1 477 | 1 5861 |
| சிங்கப்பூர் டொலர் | 141 3602 | 152 381 |
| ஸ்ரேலிங் பவுன் | 311 414 | 328 818 |
| சுவிஸ் பிரான்ங் | 250 3843 | 266 4343 |
| ஐ.அ.டொலர் | 245 8447 | 257 2 00 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 1580 |
| குவைட் | குவைட் தினார் | 0,061 3810 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3 18 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 1732 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0276 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1451 |

# போராட்டத்தால் ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்ட நிலைமை நாட்டை சீரழிக்க முயலும் தலைமைகளுக்கும் சிறந்த பாடம்

## உக்குவளை பிரதேச சபை உறுப்பினர் சுரேன் சுட்டிக்காட்டு

*(மாத்தளை நிருபர்)*

காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தால், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிலைமை, தெடர்ந்தும் நாட்டை குட்டிச் சுவராக்க எண்ணும் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் நல்லதொரு பாடமாகும் என இலங்கை புதிய ஜனநாயக மாக்சிஸ லெனின் கட்சி அமைப்பாளரும் அரசியல் பீட உறுப்பினரும் உக்குவளை பிரதேச சபை உறுப்பினருமான சுரேன் தெரிவிக்கின்றார்.

புதிய ஜனநாயக மாக்சிஸ லெனின் கட்சியினர் மாத்தளை நவோதய கலாபீட மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஏற்பாடுசெய்திருந்த செய்தியாளர்களின் சந்திப்பின்போதே சுரேன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசம் இந்நாட்டு மக்களை பொருளாதார ரீதியாக, கலாசார, மத ரீதியாக அதலபாதாளத்தில் கொண்டு போய் சிக்கவைத்தது. இந்நாட்டில் இனங்களுக்கிடையே முருகல் நிலையை ஏற்படுத்தி அதிலே ராஜபக்ஷ குடும்பத்தினர் குளிர் காய்ந்த வரலாறே கடந்த இரண்டு தசாப்தங்களாக நாம் கண்ட உண்மை சம்பவங்கள். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்ரியிடம் தோல்வியடைந்த, மகிந்த ராஜபக்ஷ மக்களால் அரசியலிலிருந்து ஓரம் கட்டப்பட்டார். மக்களால் ஓரம் கட்டப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட அவருக்கும், அரசியல் புரியும்போது காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்கி, மே மாதம் 9ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களின் ஆர்ப் பாட்டத்தை தாங்கிக்கொள்ள முடியாது பிரதமர் பதிவியை விட்டும் துறந்துபோனார்.

நாட்டின் இரட்டை பிரஜா உரிமை கொண்டவரும் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகருமான பெசில் ராஜபக்ஷ ஆர்ப்பாட்டக்காரர்களின் எதிர்ப்பு அலை களுக்கு மத்தியில் ஜூன் மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து ஓரம் கட்டப்பட்டார். இது ஆர்ப்பாட்டக்காரர்களின் இரண்டாவது வெற்றி.

தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட காலிமுகத்திடல் 'கோட்டா கோ ஹோம்' ஆர்ப்பாட்டக்காரர்களும் நாட்டின் நாளா திசைகளிலிலும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராக கொதித்தெழும்பிய மக்களின் எதிர்ப்பு அலையையும் தாங்கிக்கொள்ள முடியாத, கோட்டாபய ராஜபக்ஷ இதுவரையும் தான் தங்கியிருந்த அலரிமாளிகையை விட்டும் ஓடி ஒழிய வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டதோடு, இன்று பதவி விலகப்போவதாக சபாநாயகர் மூலம் தெரிவித்திருக்கின்றார். இது ஆர்ப்பாட்டக்காரர்களின் மூன்றாவது வெற்றி.




ராஜபக்ஷ குடும்பத்தினர் அரசியலில் இருப்பை தக்க வைத்துக்கொள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்தி, நாட்டு மக்களிடையே இனவாதத்தை ஏற்படுத்தி குறிப்பாக, ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தாக்குதல் மூலம் அரசியலில் காலூண்டிய கோட்டாபய ராஜபக்ஷவால் தனது அரசியலில் ஐந்து வருடம் பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் மூன்று வருடங்கள் செல்வதற்கு முன்பதாக மூட்டை முடிச்சிகளுடன் குடும்பம் சகிதம் நாட்டை வெளியேற முற்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மூலமாக ஆரம்பிக்கப் பட்ட ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிலைமை, தெடர்ந்தும் நாட்டை குட்டிச் சுவராக்க எண்ணும் அரசியல் கட்சிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் நல்லதொரு பாடமாகும். விசேடமாக குடும்ப ஆட்சி நடத்திய ராஜபக்ஷக்களின் நிலைமை நாட்டில் குடும்ப ஆட்சியை தொடர்ந்துவரும் ஏனைய அரசியல் கட்சிகாரர்களுக்கும் இது ஒரு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

மலையக மக்கள் இந்த அரசினால் பெரும் துயரை மேற்கொண்ட போது, அது சம்பந்தமாக ராஜபக்ஷ குடும்பங்களை பாதுகாத்திடவும் தங்களது அரசியல் இருப்பிடங்களை தக்க வைத்துக்கொள்ளவும் செயல்பட்ட மலையக அரசியல் தலைமைத்துவங்கள் மலையக மக்களைப்பற்றி பேச வில்லை. தோட்ட தொழிலாளர்களின் அவல நிலைப்பற்றியும் பேசவில்லை. இன்றுவரை ஆயிரம் ரூபா சம்பள உயர்வு என்பது பேசுபொருளாகவும் ஒரு கண்துடைப்பு சம்பவமாகவுமே இருக்கின்றது.

எனவே, நடந்து முடிந்த மூன்று மாத போராட்டத்தின் முடிவு நாட்டு மக்களுக்கு துன்பம் கலைந்த, வறுமை கலைந்த பொருளாதாரம் நிறைந்த அபிவிருத்திகள் அதிகரிக்கக்கூடிய இனங்களுக்கிடையே விரிசல்கள் ஏற்படாத, இன ஐக்கியத்தை ஏற்படுத்தக்கூடிய நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்க இந்த போராட்டம் நமக்கு வழிவகுக்க வேண்டும். எதிர்காலத்தில் அப்பாவி பொதுமக்களை பகடைக்காய்களாய் பாவித்து அரசியல் புரியும் நிலைமை மாறி உண்மையாகவே மக்களுக்காக சேவை செய்யக்கூடிய நல்லதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்திட நமது மலையக அரசியல் தலைமைத்துவங்கள் முன்வர வேண்டும் - என்றார்.

# நமுனுகுல வீதியில் பள்ளத்தில் வீழ்ந்து ஜீப் வண்டி விபத்து; சாரதி படுகாயம்



*(நடராஜா மலர்வேந்தன்)*

பசறை நமுனுகுல வீதியில் ஜீப் ஒன்று வீதியை விட்டு விலகி, பாலத்தின் கீழ் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் சாரதி படுகாயமடைந்து வைத்திசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

பசறை நமுனுகுல பிரதான வீதியில் கோணகலை நோக்கி நேற்று காலை (12) சென்று கொண்டிருந்த ஜீப் வண்டியொன்று கோணகலை புஹுல்வத்தை பாடசாலைக்கு அருகிலுள்ள பாலத்திலிருந்து கீழே வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் வாகன சாரதி படுகாயமடைந் துள்ளதோடு, அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு பசறை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கற்பாறைகளை அகற்றகோரி வாகன சாரதிகள் கோரிக்கை



*(தலவாக்கலை நிருபர்)*

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் டெவன் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கற்பாறைகள் சரிந்து வீதியில் வீழ்ந்துள்ளன.

இதனை சீர்செய்யும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை முன்னெடுக்க வில்லை என வாகன சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, வாகன போக்குவரத்துக்கு இடையூராக இந்த கற்பாறைகள் பிரதான வீதியோரமாக கிடப்பதால் இதனை உடனடியாக அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வாகன சாரதிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நாவலப்பிட்டி கதிரேசன் ஆரம்ப பாடசாலை அதிபரின் காரியாலயத்தை உடைத்து திருட்டு





*(மஸ்கெலியா நிருபர்)*

நாவலப்பிட்டி கதிரேசன் ஆரம்ப பாடசாலை அதிபர் மற்றும் உப அதிபர் காரியாலயம் உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு காரியாலயத்தை உடைத்து பொருட்களை களவாடியுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்துள்ளதோடு, சம்பவம் குறித்து நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மோப்ப நாய்கள் ஊடாகவும் கைரேகை நிபுணர்கள் ஊடாக தேடல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, திருடர்களுக்கு பாடசாலையும் ஒரு களமாக அமைந்திருக்கிறது தான் வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக பாடசாலையின் அதிபர் பெ.லோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும், பார்த்துப் பார்த்து செதுக்கிய ஒரு கலைக்கூடம் நாசமாக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



# கோட்டாபய பதவி விலகினால் அடுத்த பதில் ஜனாதிபதி யார்?

## அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகள் என்ன?



**சட்டத்தரணி**
**எஸ்.மோகனராஜன்**

இலங்கை வரலாறு காணாத விதமாக ஜனநாயக ரீதியாக அமைதியான போராட்டத்தின் ஊடாக இளைஞர்கள், யுவதிகள், உழைக்கும் வர்க்கத்தினர் புத்திஜீவிகள் என எல்லோரும் சேர்ந்து அதிகார துஷ்பிரயோகம், ஊழல் சுரண்டல் செய்த தகுதியற்ற ஜனாதிபதியை விரட்டி அடிப்பதற்கான போராட்டத்தினை 2022 ஜூலை மாதம் 9 ஆம் திகதி நடத்தி, அதன் ஊடாக ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை போன்றவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இந்த வெற்றி ஜனநாயக மற்றும் மக்களின் வெற்றி, என்றாலும் இந்த வெற்றியின் பின்னர் நாட்டினுடைய அரசியல் நிலவரம் அரசியல மைப்பு ரீதியான செயல்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றன? என்பது தொடர்பில் போராட்டக்காரர்கள் ஒரு பிரகடனத்தையும் ஊடக அறிக்கையையும் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் சர்வ கட்சி அரசாங்கத்தினை ஏற்க மறுத்திருக்கிறார்கள். அதுபோல போராட்டக் காரர்களை ஆலோசகர்களாக வைத்த ஓர் இடைக்கால அரசாங்கத்தை பரிந்துரை செய்கிறார்கள். அதனை மையமாகக் கொண்டு மக்கள் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுத்தருமாறு கூறுகிறார்கள்.

ஆனால், மிகவும் அமைதியான முறையிலே நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் சில அசம்பாவிதங்கள் நடந்திருந்தாலும் கூட சிலர் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்து இந்த போராட்டத்தில் மக்கள் சக்தியை உலகுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த நிலையிலே அரசியலமைப்பின்படி ஜனாதிபதி ஒருவர் பதவி விலகும்போது அவர் தன்னுடைய கையொப்பத்தினையிட்டு சபாநாயகருக்கு எழுத்து மூலம் பதவி விலகுவதாக அறிவித்து பதவி விலகலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தற்காலிகமாக பதில் ஜனாதிபதியாக பிரதமர் பொறுப்பேற்பார். பிரதமர் அவ்வாறு பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்காத சந்தர்ப்பத்தில் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பொறுப்பேற்பார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிரதமர், பதில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் எனும் இரண்டு பதவிகளை வகிக்க முடியாது.

எனவே அவர் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிறகு அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையை பெறக்கூடிய ஒருவர் பிரதமராக தேர்வுசெய்யப்படலாம் அல்லது அமைச்சரவையில் உறுப்பினர் அல்லாத, ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறக்கூடிய ஒருவர் பிரதமராக பதவி ஏற்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. அதாவது பிரதமர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்கின்ற காலப்பகுதியானது நாட்டின் அடுத்த ஜனாதிபதியை நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யும் வரை அவர் ஜனாதிபதியாக பதவி வகிப்பார். பிரதமர் பதில் ஜனாதிபதியாக பதவி வைக்க விரும்பாத சந்தர்ப்பத்தில் சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பதவி வகிப்பார். எனவே முப்பது நாட்களுக்குள் நாடாளுமன்றம், உறுப்பினர்களில் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும். அதுவரை பிரதமர் அல்லது சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக கடமை ஆற்றுவார்.

இவ்வாறு, ஜனாதிபதித் தேர்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் படி, ஜனாதிபதி தெரிவு செய்ய நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வேட்பு மனு கோரப்படும். நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியினுடைய பதவி வெற்றிடம் காணப்படுகின்றது என்று அறிவித்ததன் பின்னர், இந்த வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய கோரும் பட்சத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்யலாம். அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராவது ஒருவரை, ஒன்றுக்கு மேற்பட்டவர்களை ஜனாதிபதி பதவியை பதவிக்கு முழ்மொழியலாம்.

அவ்வாறான, சந்தர்ப்பங்களில் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களிடமிருந்து எழுத்து மூலமாக சம்மதம் பெறப்பட்டு அதன் அடிப்படையிலே ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வேட்பாளர்களாக முழ்மொழியப் படும் போது, தேர்தல் இடம்பெறும். இந்த தேர்தல் ரகசிய வாக்கெடுப்பாக இடம் பெறுவதோடு ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் போட்டியிடும் பொழுது செலுத்தப்பட்ட வாக்குகளில் 50 வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை பெறக்கூடிய ஆதரவு பெற்ற ஒரு வேட்பாளர் ஜனாதிபதியாக அறிவிக்கிப்படுவார்.

2 அல்லது 3 வேட்பாளர்கள் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் ஆக குறைந்த வாக்குகளை பெற்ற வேட்பாளர் அந்த போட்டியிலிருந்து விலக்கப்பட்டு அவருடைய வாக்குச்சீட்டில் இரண்டாவது தெரிவாக இருக்கக்கூடிய தெரிவு எஞ்சியிருக்கக்கூடிய வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டு அதில் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்ற நபர் தெரிவுசெய்யப்படுவார். அவ்வாறு 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெறாத இரண்டு வேட்பாளர்கள் மட்டும் காணப்படுவார்களாக இருந்தால் அதில் அதிகப்படியாக வாக்குகளை பெற்ற கூடிய ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் அறிவிப்பார்.

ஜனாதிபதி பதவி விலகுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது ஜனாதிபதியினுடைய பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில், பிரதமர் அந்த பதவியை ஏற்க தயாராக இல்லாத சந்தர்ப்பத்திலே சபாநாயகரும் அந்த பதவியை தயாராக இல்லா சந்தர்ப்பத்திலே என்ன நிலைமை என்பது தொடர்பான சிக்கல் காணப்படுகிறது. ஆனால் நிச்சயமாக பிரதமர் அதனை ஏற்காத சந்தர்ப்பத்தில் சபாநாயகர் அந்த பதிவை ஏற்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் அரசியலமைப்பு அதற்கான ஏற்பாடு செய்திருக்கிறது. ஆனால் அது தற்காலமாக 30 நாட்களுக்கு மாத்திரம் பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் செயல்படுவார்.

உறுப்பினர்களில் ஒருவரை தேர்தலின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் வாக்களிக்கப்படக்கூடிய ஒரு தேர்தலின் ஊடாக ஜனாதிபதி தேர்வு செய்யக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் ஜனாதிபதி பதவி விலகும் சந்தர்ப்பத்தில் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவி வகிக்க கூடாது அல்லது அவர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்படக்கூடாது எனும் நிலை காணப்படுகின்ற சந்தர்ப்பத்திலே சபாநாயகர் பதில் ஜனாதிபதியாக பதவி ஏற்பார். அதன் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் 30 நாட்களுக்குள் ஏற்கனவே கூறியது போல புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவதற்காக செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்த பதில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தினை கலைக்க முடியாது. பிரதமரையோ அமைச்சர்களையோ மாற்ற முடியாது. ஏனைய விதமான மக்கள் தீர்ப்பு ஒன்றை அல்லது அரசியல் திட்டம் ஒன்றை கொண்டுவர முடியாது போன்ற எந்த விதமான தடைகளும் இல்லாத சந்தர்ப்பத்தினால் பதில் ஜனாதிபதி ஒருவர் ஜனாதிபதி போலவே நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக செயல்படுவார்.

இது இலங்கையில் அரசியல் அமைப்பில் காணப்படக்கூடிய ஒரு முக்கியமான குறைபாடாக அல்லது எதிர்காலத்தில் கவனிக்கப்பட வேண்டிய திருத்தப்பட வேண்டிய ஒரு ஏற்பாடாக காணலாம். எனவே இந்த விதமான ஏற்பாடுகளுக்கு அமையவே இலங்கையில் புதிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படலாம் எனவே ஒரு இடைக்கால அரசு ஒன்றினை இந்த அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அப்பால் நிறுவுதல் சாத்தியமற்றது. ஆனால் இந்த அரசியல் அமைப்பு ஏற்பாடுகளை மீறி அதனை செய்ய முடியாது. எனவே அரசியல் ரீதியான அரசியலமைப்பு ரீதியான சிக்கல்களை தவிர்ப்பதற்கு எதிர்காலத்தில் அரசியலமைப்பு திருத்தம் ஒன்று ஏற்பட வேண்டியது அவசியம்.



யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்று (12) காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# எரிபொருள் வழங்கக் கோரி யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையை வழிமறித்து போராட்டம்





(யாழ். நிருபர்)

எரிபொருள் வழங்கக்கோரி, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையை வழிமறித்து யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் (12) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு அருகிலுள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்தவர்களே இவ்வாறு வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இணைய வழியில் பதிவுசெய்பவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்ததால், அங்கு நீண்ட நாட்களாக காத்திருந்த பொது மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்மராட்சியில் மீண்டும் தலைதூக்கும் கொரோனா

## இருவருக்கு தொற்று உறுதி

(சாவகச்சேரி நிருபர்)




சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எல்லைக்குட்பட்ட அல்லாரை மற்றும் கைதடிப் பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான இருவர் நேற்று முன்தினம் (11) அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதாரப் பரிசோதகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான இருவருக்கும் மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் மற்றும் பீ.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களை அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அசாதாரண நிலைமை காரணமாக பஸ், புகையிரதம் உள்ளிட்ட பொது இடங்களில் ஏற்படுகின்ற நெரிசல் நிலைமையால் கொரோனா மேலும் தீவிரமடையக்கூடிய அபாய நிலை காணப்படுவதாகவும் அத்துடன் வைத்தியசாலைகள், மருந்தகங்களில் பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், மருந்தகங்களில் மருந்துப்பொருட்கள் பன்மடங்கு விலையேற்றம் அடைந்திருப்பதால் பாரிய சிக்கல் நிலைமை ஏற்படும் எனவும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

கடந்த வருடம் தென்மராட்சியில் அதிக கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், கொரோனா மரணங்களும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com








ஊடக அடக்குமுறை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து யாழ். பல்கலைக்கழகம் முன்றலில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப்போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு தமது கண்டனங்களை தெரிவித்தனர்.

# பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் சூறை காற்றுடன் கடல் சீற்றம்

## வீதியில் மணல் மூடி போக்குவரத்து பாதிக்கும் அபாயம்



(மன்னார் நகர் நிருபர்)

தனுஷ்கோடி தெற்கு மற்றும் வடக்கு கடல் பகுதி வழக்கத்துக்கு மாறாக சீற்றத்துடன் காணப்படுவதால் முகுந்தராயர் சத்திரத்திலுள்ள படகு நிறுத்தும் தளம் மீது கடல் அலைகள் மோதி இராட்சத அலையாக எழும்பி வருகிறது.

கடற்கரை பகுதியில் வீசி வரும் சூறைக்காற்று காரணமாக புழுதி காற்று வீசி வருவதால் வீதிகளில் வாகனங்களை இயக்க முடியாமல் சாரதிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

தமிழகத்தில் நிலவிவரும் மேற்கு திசை காற்று வேக மாறுபட்டால் குமரிக்கடல், மன்னார் வளைகுடா, தென் தமிழகம், இலங்கை கரையோரங்களில் பலத்த காற்று வீசக்கூடும். 40-50 கி.மீ. வேகத்தில் பலத்த சூறாவளி வீச வாய்ப்புள்ளதாக மீனவர்களுக்கு சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த தனுஷ்கோடி வடக்கு பாக்குநீரிணை மற்றும் தெற்கு மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் வழக்கத்திற்கு மாறாக 35 முதல் 45 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசி வருவதுடன், கடல் சீற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால் தனுஷ்கோடி அருகே முகுந்தராயர் சத்திரம் பகுதியிலுள்ள மீன் இறங்கு தளம் பாலம் மீது இராட்சத அலைகள் மோதுவதால் கடல் அலைகள் 6 அடி முதல் 8 அடி உயரத்திற்கு எழுந்து வருகிறது.

கடல் சீற்றம் காரணமாக தனுஷ்கோடி தெற்கு, மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பலத்த காற்று வீசி வருவதால் ஏற்படும் புழுதி புயல் காரணமாக தனுஷ்கோடி வீதியில் ஓரிரு இடங்களில் கடற்கரை மணலால் முடியுள்ளது.

இந்த மணலில் இருசக்கர வாகனங்கள் மீன் ஏற்றிச் செல்லும் வாகனங்களும் வீதியில் செல்ல முடியாமல் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

# வளர்ந்துவரும் ஆசிய காப்புறுதி விருதுகள் 2021;

## சிறந்த மூலோபாயங்களுக்கான விருதை வென்ற ஜனசக்தி

இந்தியாவின் கொல்கத்தாவில் சமீபத்தில் இடம்பெற்ற 3ஆவது ICC Emerging Asia Insurance Awards 2021 (வளர்ந்துவரும் ஆசிய காப்புறுதி விருதுகள் 2021) இல், 2021ஆம் ஆண்டில் மேற்கொண்ட காப்புறுதி விரிவாக்கத்திற்காக சிறந்த மூலோபாயங்களுக்கான விருதை ஜனசக்தி லைஃப் பெற்றுள்ளது. இந்திய வர்த்தக சம்மேளனத்தினால் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மூன்றாவது முறையாக இடம்பெறும் Emerging Asia Insurance Awards, விருது வழங்கும் மாநாடு, Insurance Institute of India, Life Council of India, General Council of India, National Insurance Academy, PWC ஆகியவற்றுடன் இணைந்து இந்திய வர்த்தக சம்மேளனத்தால் நடத்தப்பட்டது. ஆசியாவிலுள்ள காப்புறுதி நிறுவனங்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கவும், கௌரவமளிக்கவும் மேற்படி மதிப்பாய்வாளர்களால் இப்பிராந்தியத்தின் காப்புறுதித் தொழில்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த விருது தொடர்பில் ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான ரவி லியனகே கருத்துத் தெரிவிக்கையில், “எமது வர்த்தக மூலோபாயங்களுக்காக, இந்த பெறுமதி வாய்ந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையானது, பொருளாதார நிச்சயமற்ற இக்காலத்திலும் நாம் மூலோபாய ரீதியாக மீளெழுச்சி அடைந்துள்ளோம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இது எமது தற்போதைய விரைவாக்கம் மற்றும் இத்தொழில்துறையில் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வுகளை வழங்கி தொடர்ந்து சேவை செய்வது தொடர்பான எதிர்கால வாய்ப்புகளையும் இது பறைசாற்றுகின்றது. மேலும் இது எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் நாம் எதிர்கொண்ட சவாலான வருடத்திற்கு மத்தியில், நிறுவனத்தின் வளர்ச்சியில் ஒப்பிட முடியாத பங்களிப்பை வழங்கிய, எமது நிறுவனத்தின் சிங்கப் படையாகிய எமது ஊழியர்களின் திறனுக்கும் ஒரு சான்றாகும்.” என்றார்.



வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் கனவுகளை வலுப்படுத்துதல் ஆகிய தனது பெருநிறுவன நோக்கத்துடன், ஜனசக்தி லைஃப் நிறுவனமானது நெறிமுறை மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், அதன் பங்குதாரர்களுக்கு உண்மையாக இருந்து, அதிக பெறுமதியை வழங்க எப்போதும் பாடுபடுகிறது. வாடிக்கையாளரை எப்போதும் மையப்படுத்தியதாக, வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் காப்புறுதித் தீர்வுகள் மற்றும் சேவைகள் மூலம் காப்புறுதி வழங்குனராக இதை உறுதிப்படுத்துகிறது. இந்த நோக்கத்தை ஈடுபாட்டுடன் விரிவுபடுத்தும் வகையில், தனது ஊழியர்களுடன் இணைந்து ஜனசக்தி லைஃப் எப்போதும் அதன் குழுவிலுள்ள உறுப்பினர்களுக்கு அவர்களின் கனவுகளை நனவாக்கவும் அபிலாஷைகளை வளர்த்துக் கொள்ளவும் உதவுவதற்காக, உயர்ந்த ஒத்துழைப்புடனான பணியாற்றும் சூழலை வழங்க முயற்சித்து வருகிறது.

இலங்கையின் சிறந்த 100 மதிப்புமிக்க மற்றும் வலிமையான வர்த்தக நாமங்கள் தொடர்பாக, சமீபத்திய Brand Finance அறிக்கைக்கு அமைய, ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனம், மிக வேகமாக வளர்ந்து வரும் இலங்கை வர்த்தக நாமங்களில் ஒன்றாக, முதல் 10 (TOP 10) வர்த்தக நாம தரவரிசையில் இடம்பிடித்துள்ளது. 2022ஆம் ஆண்டில் மிகச் சிறந்த வர்த்தகநாமம் எனும் பெறுமதி வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள நிறுவனம், வேகமாக வளரும் முதல் 10 இலங்கை வர்த்தக நாமங்களில் (‘TOP 10 Fastest Growing Sri Lankan Brands’) ஒன்றாகவும் பட்டியலிடப்பட்டுள்ளது. அத்துடன், A+ மற்றும் 569 வர்த்தகநாம வலிமை குறியீட்டு (BSI) புள்ளிகளுடன், TOP 10 கௌரவ பட்டியலில் பட்டியலிடப்பட்ட ஒரே காப்புறுதி வர்த்தக நாமமாகவும் அது விளங்குகின்றது. சந்தையில் உள்ள அனைத்து ஆயுள் காப்புறுதி வர்த்தக நாமங்களின் மொத்த வர்த்தக நாம மதிப்பான 9% மட்டுமேயான அதிகரிப்புடன் ஒப்பிடும்போது, 2022 ஆம் ஆண்டில், முன்னணி காப்புறுதியாளர் வர்த்தகநாம மதிப்பின் அடிப்படையில், வருடாந்தம் 22% எனும் சிறந்த வளர்ச்சியை நிறுவனம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 2021ஆம் ஆண்டில் அதன் புதிய வியாபாரத்தில் காணப்படும் போட்டிக்கு எதிராக, சந்தையில் ஒரு மட்ட அதிகரிப்புடன் முன்னேறிய வலுவான சந்தைப் பங்கு வளர்ச்சியை அடைந்துள்ள அதே வேளையில், தொடர்ச்சியாக இரண்டு பில்லியன் மைல்கல் எனும் அடைவை கடந்து வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ள ஜனசக்தி லைஃப், தொடர்ச்சியாக அதன் வர்த்தகநாம மதிப்பை கூட்டி வருகிறது.

ஜனசக்தி சிங்கப் படையினால் நிரூபிக்கப்பட்டுள்ள சாதனை மற்றும் செயற்றிறன் ஆகியவற்றின் அடிப்படையிலான கலாச்சாரத்துடன், 2021 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய தரத்திற்கு இணையாக 100 MDRT சாதனையாளர்களை வெற்றிகரமாக அது உருவாக்கியுள்ளது. ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனம், தனது ஊழியர்களை வலுவூட்டும் அதே வேளையில், சாதகமான மதிப்புமிக்க கலாசாரத்தை வளர்ப்பதற்கான அதன் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில், அதன் ஒப்பிட முடியாததும் மீளெழுச்சி கொண்டதுமான அதன் பணியிட கலாசாரம் காரணமாக, இலங்கையில் சிறந்த பணியிடம் எனும் அங்கீகாரத்தையும் அது பெற்றுள்ளது. கடந்த 27 வருட காலப்பகுதியில், ஜனசக்தி லைஃப் பிஎல்சி நிறுவனம் காப்புறுதித் துறையில் தொடர்ந்தும் புரட்சியை ஏற்படுத்தி வருவதுடன், குறிப்பிட்டு கூறும் வகையிலான ஒரு சக்தியாக முன்னோக்கி பயணித்து வருகிறது. நாடளாவிய ரீதியில் 75 இற்கும் அதிகமான கிளைகளைக் கொண்ட அதன் கிளை வலையமைப்பானது, அனைத்து தரப்பு மக்களும் அதன் தனித்துவமான காப்புறுதி தீர்வுகளை பெறுவதற்கான வசதியை வழங்குகிறது.

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 11.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் : 1291
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 741,640.00
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 9 4 7 8 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,222,403.60

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.11
சீட்டிழுப்பு இலக்கம் 3055
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,143,380.00
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 42 53 61 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,391,525.20

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/11
சீட்டிழுப்பு இலக்கம் : 843
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,121,060.00
வெற்றி இலக்கினம்: E
வெற்றி இலக்கங்கள்: 27 32 48 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,723,994.80

சீட்டிழுக்கப்பட்ட திகதி 11.07.2022 திங்கட்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4812
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,353,160.00
அச்சிடப்பட்ட திகதி : 10.07.2022
ஆங்கில எழுத்து: E
வெற்றி இலக்கங்கள்: 2 2 0 5 8 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,987,438.40

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
சீட்டிழுப்பு இலக்கம் : 1290
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 724,520.00
வெற்றி இலக்கினம்: கடகம்
வெற்றி இலக்கங்கள்: 9 2 3 1 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,192,557.20

கொவிசெத Govisetha
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி 2022.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 3054
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,831,480.00
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 01 09 38 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,273,145.60

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /07/10
சீட்டிழுப்பு இலக்கம் : 842
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 842,260.00
வெற்றி இலக்கினம்: H
வெற்றி இலக்கங்கள்: 39 54 66 79
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,651,279.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 121
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,259,360.00
லொத்தர் சீட்டு அச்சிடப்பட்ட திகதி 10.07.2022
இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 06 19 24 41
விசேட இலக்கினம் விருச்சிகம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,993,416.00

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1160
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி: 2022.07.10
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,489,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,401,330.00
P 06 37 45 69 72
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டாவது நாளாகவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகங்களுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று (12) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகங்களுக்குட்பட்ட சமுர்த்தி திணைக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் கடமைக்கு சமுகமளிக்காத நிலையில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி மகாசங்கத்தின் கிளைகள் என்பன மூடிக் காணப்படுகின்றன.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையினால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விசேட கொடுப்பனவு வழங்குவதிலும் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



## ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்த தானம்





(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற இரத்த தான முகாமில் செயலக உத்தியோகத்தர்களும், பிரதேச மக்களும் கலந்துகொண்டு இரத்த தானத்தினை வழங்கிவைத்தனர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர் ரி.தவனேசன் தலைமையிலான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு இரத்த தானத்தினை திறம்பட மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்திசெய்யும் வகையில் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மக்கள் மூலம் இரத்த தானம் வழங்கிவைக்கப்பட்டதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

## கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த சித்திரத்தேர் திருவிழா



(கனகராசா சரவணன்)

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொத்துக்குளம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த சித்திரத்தேர் திருவிழா நேற்று (12) மிக சிறப்பாக இடம்பெற்றது.

மஹோற்சவ திருவிழா ஆலய பிரதம குரு ஸ்ரீ நிஜோத் குருக்களின் வழிகாட்டலில் விநாயகர் வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, விசேட கும்ப பூஜைகள் நடைபெற்றதுடன், பிள்ளையாரடி



புரவிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து கொடிச்சீலையும் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது.

இதன்போது கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் நடைபெற்றதுடன், மூலமூர்த்தி மற்றும் பாரிபால மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக பூஜைகளும் நடைபெற்று, வசந்த மண்டபத்தில் எழுந்தருளியுள்ள அம்மனுக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டு கொடிக் கம்பத்துக்கு அருகில் விசேட பூஜைகள் நடத்தப்பட்டதுடன் வேத, மேள வாத்தியங்கள், நாதங்கள் முழங்க அடியார்களின் அரோகரா கோஷத்துடன் கடந்த 4ஆம் திகதி வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

10 தினங்கள் நடைபெறவுள்ள ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று சித்திரத்தேர் பவனி இடம்பெற்றது. இதில் பெரும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## காத்தான்குடி அல்-ஹிறா பாடசாலை கூரைகளை பழைய மாணவர்கள் புனரமைக்க ஏற்பாடு







(மட்டக்களப்பு நிருபர்)

கட்டார் நாட்டில் கடமைபுரியும் காத்தான்குடியைச் சேர்ந்த நலன்விரும்பிகள் (KCQ) அமைப்பு மற்றும் அல்-ஹிறா மகா வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இப்பாடசாலை வகுப்பறையில் கற்கும் மாணவர்களின் நன்மை கருதி கூரை வேலைக்கான (Heat proof foiling seat) அன்பளிப்பினை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் ஏ.எல்.சப்ரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் KCQ உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழுச் செயலாளர் எம்.எஸ்.பஷீர் அகமட் மற்றும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உப தலைவர் ஏ.எல்.சபீல் (நளீமீ) உட்பட உறுப்பினர்கள், ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## சர்வகட்சி ஆட்சிமுறை வேண்டாமெனக் கூறி மட்டக்களப்பில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்







(கனகராசா சரவணன்)

சர்வகட்சி ஆட்சி முறைவேண்டாமென்றும், மக்கள் விரும்பும் ஆட்சி முறையை கோரியும் மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் ஜே.வி.பி. கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் நேற்று (12) ஈடுபட்டனர்.

ஜே.வி.பி. கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் என்.சுந்தரேசன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து நேற்று காலை 10 மணிக்கு காந்திபூங்காவிற்கு முன்னால் கட்சி ஆதரவாளர்கள் சிலர் ஒன்று கூடினர்.

இதனையடுத்து ஊழலைத் தவிர நீங்கள் உருப்படியாக செய்தது என்ன, நாட்டை விற்று ஏப்பம் விட்ட கொள்ளையரை விரட்டியடிப் போம், திருடர்களை விரட்டியடிப்போம், உங்களுக்கு கொண்டாட்டம் - மக்களுக்கு திண்டாட்டம், அரச நிறுவனங்களை விற்பதை நிறுத்து, போராட்டத்தை நிறுத்தாமல் தொடர்வோம், மக்கள் ஆட்சிக்கு இடம்கொடு, மக்களை ஏமாற்றும் உனக்கு இந்த மண்ணில் இடம் எதற்கு?, சர்வகட்சி அரசாங்கம் வேண்டாம் போன்ற பல சுலோகங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## திறன் வகுப்பறைகள் ஆரம்பித்துவைப்பு



(கிண்ணியா நிருபர்)

அவுஸ்ரேலியாவில் இயங்கும் வன்னி ஹோப் மற்றும் ஐக்கிய இராஜ்ஜியத்தில் இயங்கும் ரட்ணம் பவுன்டேஷன் ஆகிய நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் பின்தங்கிய கிராமங்களில் உள்ள ஏழு பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைகள் ஸ்தாபித்து, அவற்றினை பாடசாலைகளுக்கு உத்தியோகபூர்வமாக கைளிக்கும் நிகழ்வு நேற்று (12) திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை கல்வி வலயத்திற்குட்பட்ட ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயம், குளக்கோட்டம் தமிழ் வித்தியாலயம், முத்துநகர் முஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலை, முள்ளிப்பொத்தானை விக்னேஸ்வரா வித்தியாலயம், பாலம்போட்டாறு சித்தி விநாயகர் வித்தியாலயம், கண்ணியா இராவணேஸ்வரா வித்தியாலயம் மற்றும் கோபாலபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய ஏழு பின்தங்கிய பாடசாலைகளுக்கு தலா ஆறு இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட திறன் வகுப்பறைகள் வழங்கிவைக்கப்பட்டன.

## மட்டு. வாவிக்கரை ஓரங்களில் வீசப்பட்ட உக்காத கழிவுகளை அகற்றும் பணி

### மெதடிஸ்த மத்திய கல்லூரியின் மாணவர்கள் முன்னெடுப்பு









(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் கணித பிரிவு மாணவர்களினால் மட்டக்களப்பின் வாவிக் கரை ஓரங்களில் வீசப்பட்ட உக்காத கழிவுகளை அகற்றும் பணிகள் நேற்று இடம்பெற்றன.

"கனவு மெய்ப்பட - பொறியியல் பீடம் நோக்கி" எனும் செயற்றிட்டம் மூலம் மாவட்டத்தில் பல பொறியியலாளர்களை உருவாக்கும் நோக்கோடு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியினால் கணித பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது.

கல்விச் செயற்பட்டோடு மாத்திரம் நின்று விடாது சமூக சேவையிலும் மாணவர்களை வழிநடத்தும் முகமாக இவ்வாறான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எந்திரி கோபிநாத் யோகசுந்தரம் ஊக்கமளித்து வழிநடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை காலத்திலிருந்தே சமூகத்தின் மீது அக்கறை செலுத்தும் மனப்பாங்கை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் பாடசாலைக்கும், உந்துசக்தியாக இருப்பவர்களுக்கும், மாணவர்களுக்கும், மட்டக்களப்பு மக்கள் வாழ்த்துகளையும், பாராட்டையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடு வீடாகச் சென்று ஆட்டோ சாரதிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை மற்றும் மீராவோடை பகுதி ஆட்டோ சாரதிகளுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக ஆட்டோ ஓட்டுனர்கள் அன்றாடம் வாழ்வாதாரம் இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்ட காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் கடந்த 08ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்ட 51 ஆட்டோ சாரதிகளுக்கு 1500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்ற இந்நிலையில், உதவும் உள்ளங்கள் அமைப்பினர் சைக்கிளில் வீடு வீடாகச் சென்று ஆட்டோ சாரதிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையானது ஊடக சுதந்திரத்தை மழுங்கடிக்கும் செயற்பாடு

## இலங்கை அரச ஆசிரியர் சங்கம் கண்டனம்

(மண்முனை நிருபர் )

"ஜனாதிபதி பதவி விலகக்கோரி சமத்துவ ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த 09.07.2022 அன்று இடம்பெற்ற மாபெரும் மக்கள் கிளர்ச்சியினை உண்மைக்கு உண்மையாக நேரலையாக செய்தி வழங்கிக்கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் காட்டுமிராண்டித் தனமாக பாதுகாப்பு தரப்பினரால் திட்டமிட்டு தாக்கப்பட்டமையினை கிழக்கு மாகாண ஆசிரியர்கள் சார்பில் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என இலங்கை அரச ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண செயலாளர் கோபாலசிங்கம் சுஜிகரன் நேற்று (12) ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ශ්‍රී ලංකා රජයේ ගුරුවරුන්ගේ සංගමය
The Government Teachers Association of Sri Lanka
இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கம்
www.governmentteachers.com

ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்பு படையினரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான இத்தாக்குதல் நாட்டின் ஆட்சியாளர்களின் இயலாமையை எடுத்துக்காட்டுகின்றது. மேலும், ஊடக சுதந்திரத்தை முழுமையாக மழுங்கடிக்கும் ஒரு செயற்பாடாகவே இது அமைகின்றது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் இன்று நேற்றல்ல, இந்நாட்டில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வருவதுடன், திட்டமிட்ட படுகொலைகளும் இடம்பெற்று வருகின்றன.

ஊடகவியலாளர்கள் மீதான காட்டுமிராண்டித் தனமாக தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். அரசாங்கமும், படையினரும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் அக்கறை செலுத்த வேண்டும். அவர்களது கடமைகளை அவர்கள் தங்குதடையின்றி செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஊடக சுதந்திரத்தை முழுமையாக அமைத்துக்கொடுக்க வேண்டும். மேலும், அன்றைய தினம் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அநீதிக்கு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டு போராட்டத்தின் போதான ஊடகவியலாளர்களின் பங்களிப்பை நாங்கள் ஒருபோதும் மறக்க மாட்டோம். இவ்விடத்தில் ஊடகவியலாளர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். எனவே, இத்தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் பூரண குணமடைந்து மீண்டும் பணிக்குத் திரும்ப வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ளார்.

# கிண்ணியா சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

## எரிபொருள் வழங்குமாறு வலியுறுத்து










(திருகோணமலை, கிண்ணியா நிருபர்கள்)

திருகோணமலை – கிண்ணியா பிரதேசத்தில் கடமையாற்றி வரும் சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள் நேற்று (12) கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் கிண்ணியா தள வைத்தியசாலை ஊழியர்கள், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

தங்களுக்கு தூர இடங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு செல்லமுடியாது எனவும், தமக்கு கிண்ணியா பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"உயிர் காக்கும்போது முன்னிலையில் - பெற்றோல் வரிசையில் பின்னிலையில்", "வழங்கு வழங்கு பெற்றோல் வழங்கு!" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனியுடன் கலந்துரையாடியதுடன், மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இதேவேளை குறித்த மகஜரை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைப்பதாகவும் பிரதேச செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு 4000 லீற்றர் டீசல் வழங்க நடவடிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊடாக மூன்றாவது தடவையாக இன்று (13) மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு 4000 லீற்றர் டீசல் வழங்கி வைக்கப்படவுள்ளது.

அதற்கான விவசாயிகளின் பெயர்கள் அறுவடைத்திகதியின் முன்னுரிமை அடிப்படையில் அதற்குப் பொறுப்பான துறைசார் அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி முன்னுரிமை அடிப்படையில் வாழைச்சேனை கமநல கேந்திர நிலையம், கிரான் கமநல கேந்திர நிலையம், மண்டபத்தடி கமநல கேந்திர நிலையம் அடங்கலான மூன்று ஏபிசிகளில் 4 கண்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து வருகின்ற நாட்களிலும் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு டீசல் வழங்குவதற்கு தயாராக உள்ளதாக மட்டக்களப்பு நகரிலுள்ள ஐ.ஓ.சி. உரிமையாளர் தேசபந்து எம்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் ஏற்கனவே இரண்டு தடவைகளில் விவசாயிகளுக்கு முன்னுரிமையடிப்படையில் 3500 லீற்றர் டீசலினையும், 50 விவசாயிகளுக்கான பெற்றோலினையும் வழங்கியிருந்ததுடன், மாவட்ட விவசாயிகளிடம் நன்மதிப்பை பெற்றுள்ளது மட்டுமல்லாது, தொடர்ச்சியாக விவசாயிகள் தமது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து வருகின்றனர்.

நாடுபூராகவும் எரிபொருளை பெற்றுக்கொள்வதில் அனைத்து தரப்பினரும் பாரிய இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்ற நிலையில், மட்டக்களப்பு நகர் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையமானது தொடர்ச்சியாக ஒரு வார காலமாக நாளாந்தம் எரிபொருளை வழங்கி வருகின்றமையால், மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு கிடைத்த வரமாகவே குறித்த எரிபொருள் நிலையத்தையும், அதன் உரிமையாளரையும் பார்ப்பதாக மாவட்ட புத்திஜீவிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



**இண்டைக்குத்தான் தெரியும் கோட்டா அம்மாச்சி பதவி விலகுறாரா, இல்ல சுகவீனம் எண்டு லீவு எடுக்கிறாரா எண்டதெல்லாம்..!**

**அதுக்குள்ள ஜனாதிபதி கனவுல பலபேர் இருக்காங்க.. சும்மா கூட்டமைப்பு சுமந்திரன்ட பேரையும் இதுக்குள்ள இழுத்து விக்கி ஐயா நாடகம் ஆடுறாரு. அவரு சிங்கள சம்மந்தி ஆனாலும், சுமந்திரன் தம்பி மகனுக்கு சிங்கள பொண்ண கலியாணம் முடிச்சாலும், பிரதமராக எந்த சிங்களவர்களும் இவங்கள கிட்டயும் எடுக்கமாட்டாங்க எலுவா? இது கிழவிக்கும் தெரிந்த சங்கதி.. சிலருக்கு தெரியல்ல!**

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்து காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம்




(காத்தான்குடி நிருபர்)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு வெளியே கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட அமைதியின்மையின்போது, செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் வலியுறுத்தியும், காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பில் பல்வேறு ஊடகங்களில் கடமையாற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களால் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் (11) மாலை காத்தான்குடி குட்வின் சதுக்கத்தில் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்ததுடன், "ஊடக சுதந்திரத்தை பறிக்காதே!", "ஊடகத்தையும் உணர்வுகளையும் ஒடுக்க நினைக்காதே!", "ஜனநாயகத்தின் நான்காவது தூணை நசுக்க நினைக்காதே!" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வேனின் ரயர் வெடித்ததால் மின்கம்பத்தில் மோதி விபத்து

## சாரதி மயிரிழையில் உயிர்தப்பினார்



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த வேனின் ரயர் வெடித்ததால் வேன் பாதையை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியதால் வேனுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், மின்கம்பத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இவ்விபத்தின்போது வேனிலிருந்து எயார்பேக் சரியாக இயங்கியதால் சாரதி ஆபத்தின்றி உயிர்தப்பினார். எயார்பேக் இல்லாதிருந்திருந்தால் ஸ்டியரிங்கில் நெஞ்சுப்பகுதி மோதுண்டு சாரதி உயிரிழந்திருப்பார்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# திருமலையில் கூப்பன் அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை




(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - மொரவெவ பிரதேச மக்களுக்கு கூப்பன் மூலம் பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று முதல் நாளைவரை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் பதிவுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்களை பதிவுசெய்யும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், வாகன உரிமையாளர்கள் தங்களது வாகன உரிமைப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் காப்புறுதி போன்றவற்றை எடுத்துக் கொண்டு வருமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மோட்டார் சைக்கிள்களுக்கு 1000 ரூபா, மூன்று சக்கர வாகனங்களுக்கு 2500 ரூபா, கார்களுக்கு 5000 ரூபா என எரிபொருள் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் மொரவெவ பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் கூப்பனை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மக்களின் பொருளாதார மீட்சியில் கைகொடுக்கும் கிழக்குப் பல்கலை







கிழக்கின் கலங்கரை விளக்காக அமைந்து, திறன் மிக்க எதிர்கால தலைவர்களை உருவாக்கும் முக்கிய நிறுவனமாக கிழக்கு பல்கலைக்கழகம் திகழ்கின்றது.

சூழலியல் மாற்றங்கள் காரணமாக பல்வேறுபட்ட சமூக பொருளாதார சிக்கல் நிலைகளிற்கூடாக கடந்துவந்த இளைஞர் சமுதாயம், தமக்கும் தாம் சார்ந்த சமூகத்திற்கும் இடையிலான இடைவெளியையும் வறிதாகும் பொதுப்பரப்பையும் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

இந்நிலையில், கல்விச்சமூகம் ஒன்றை உருவாக்கும் பல்கலைக்கழகம் தன்பால் சுமத்தப்பட்ட பெரும் பணியாக இச்சமூக இடைவெளியை நிரப்பும் செயற்பாட்டை கருதுகின்றது. இதன் ஓர் அங்கமாக சமூகம் மற்றும் தொழில்சார் துறைகளை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் நிலையத்தின் திறப்புவிழா பல்கலைக்கழக வளாகத்தினுள் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில், நிலையத்தின் இயக்குனர் வைத்திய கலாநிதி கந்தசாமி அருளானந்தத்தின் வழிநடத்தலில் நடைபெற்ற நிகழ்வில் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் மற்றும் ஏனைய நிலையங்களின் இயக்குனர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தலைமை உரையில், பல்கலைக்கழகம் தான் சார்ந்த சமூகத்தை புரிந்து செயற்படுவதன் முக்கியத்துவம் பற்றியும், இவ்வாறான ஒரு சேவை பல்கலைக்கழகத்தின் மூலம் இதுவரை வழங்கப்படாத இடைவெளி உள்ளதாயும், தற்கால பொருளாதார சூழலில் எவ்வாறு தமது சமூக பொறுப்பை கையாள வேண்டும் என்பது பற்றியும் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெளிவுபடுத்தினார்.

தொடர்ந்து இந்நிலையத்தின் தற்கால தேவைப்பாடு மற்றும் ஆரம்பித்துள்ள செயற்பாடுகள் பற்றியும், சமூக மற்றும் தொழில்துறை சார் முன்னெடுப்புகள், ஒன்றிணைந்த மாதிரிக்கிராம வேலைத்திட்டம் தொடர்பாகவும் இயக்குனர் கருத்துரைத்தார்.

சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட ஏறாவூர் பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஸ்ரீநாத் தமது பூரண ஒத்துழைப்பை இந்நிலையத்தின் செயற்பாடுகளுக்கு வழங்குவதாகவும், தற்கால சூழலில் ஏற்படக் கூடிய மந்தபோஷாக்கு நிலைமை பற்றியும், அதற்கு இந்நிலையத்தின் பங்களிப்பு பற்றியும் விரிவாக விளக்கினார்.

தொடர்ந்து இடம்பெற்ற பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கான மரக்கறி, மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

பொதுமக்கள் தமது எவ்விதமான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், கள விஜயங்களையும் பல்கலைக்கழகத்தின் மூலம் பெறலாம் என்பதோடு, பல்கலைக்கழகத்தை சமூகத்துடன், இணைக்கும் இப்பணியானது சகல தரப்பினரதும் ஒத்துழைப்புடன் நீண்டு தொடரும் என்பது திண்ணம்.

# உலக செய்திகள்

## இலங்கையில் சுமூகமான முறையில் அரசாங்க மாற்றத்தை உறுதிசெய்யவேண்டும்

### ஐ.நா. பொதுச்செயலர் வலியுறுத்து



அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இலங்கையில் சுமூகமான முறையில் அரசாங்க மாற்றத்தை உறுதிசெய்யவும், பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகளை காணவும் பேச்சுவார்த்தை நடத்த ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டேரஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து ட்விட்டரில் கருத்து தெரிவித்துள்ள அவர், தான் இலங்கை மக்களுடன் ஒற்றுமையாக நிற்பதாக தெரிவித்துள்ளார். வன்முறைச் செயல்களை கண்டிப்பதாக தெரிவித்துள்ள அன்டோனியோ குட்டேரஸ், அதற்கு காரணமானவர்கள் பதில் கூற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் கடும் மழை - வெள்ளம்; 24 குழந்தைகள் உட்பட 62 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் தொடர்ந்தும் பெய்துவரும் கடுமழையால் 24 குழந்தைகள் உட்பட 62 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளம் மற்றும் இடிபாடுகள் உள்ளிட்டவற்றில் சிக்கி 48 பேர் காயமடைந்திருப்பதாகவும், 670இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கராச்சியில் கனமழையால் 3 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று காலையில் கொறங்கி, சடார், நிப்பா உள்ளிட்ட நகரின் பல பகுதிகளில் கனமழை பெய்தது.

வர்த்தக தலைநகரான கராச்சியில் கொட்டித் தீர்த்த கனமழையால் நகரின் ஏராளமான பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன.

கனமழை காரணமாக நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்ததால் அணைகள் உடைந்து ஊருக்குள் வெள்ளம் பாய்ந்தது. இதில் பல கிராமங்கள் தனித் தீவுகளாக மாறியுள்ளன.

முக்கிய வீதிகள் பாலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

## சிலியில் கடும் பனிப்புயலில் சிக்கிய 250 வாகனங்கள்; 300 பேர் மீட்பு

சிலியின் மத்தியப் பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட கடும் பனிப்புயலில் சிக்கியிருந்த ஏராளமான வாகனங்களை பொலிஸார் மீட்டனர்.

Valparaiso பகுதியில் Los Caracoles மலைச்சரிவில் 250 வாகனங்கள் சிக்கிக் கொண்டதாகவும் அதில் இருந்த 300பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

Andes மலைகளில் நிலவிய மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணிகள் 23 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும் பாதுகாப்பு கருதி ஆர்ஜென்டினா-சிலி இடையேயான பாதையை மூடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பிரித்தானியாவின் புதிய பிரதமர் யார்?




பிரித்தானியாவின் புதிய பிரதமர் எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி தெரிவுசெய்யப்படவுள்ளார்.

பொரிஸ் ஜோன்ஸன் தனது பிரதமர் பதவியையும் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் பதவியையும் கடந்த வியாழக்கிழமை இராஜினாமா செய்தார். கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே பிரதமராகவும் பதவியேற்பார்.

அதன்படி, கட்சித் தலைவர் பதவிக்கான போட்டியில் பங்கேற்கவிருப்பதாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக், அட்டர்னி ஜெனரல் சூவெல்லா பிரேவர்மன் மற்றும் சுகாதார மற்றும் சமூக நலக் குழு துணைத் தலைவர் ஜெரிமி ஹன்ட், வெளிவிவகாரங்களுக்கான சிறப்புக் குழு தலைவராகப் பொறுப்பு வகித்து வரும் டாம் டுகென்தாட், ஈராக்கை பூர்வீகமாகக் கொண்ட தற்போதைய நிதியமைச்சர் நாதிம் ஸஹாவி, நைஜீரிய வம்சாவளியைச் சேர்ந்த மதம் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கெமி பேடனாக், போக்குவரத்துத்துறை இணையமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ், வர்த்தகத்துறை அமைச்சர் பென்னி மார்டன்ட், பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்ட முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் சஜித் ஜாவித், வெளியுறவுத்துறை அமைச்சர் லிஸ் டிரஸ் மற்றும் வெளியுறவுத்துறை இணையமைச்சர் ரஹ்மான் சிஸ்தி உள்ளிட்ட 11பேர் உள்ளனர்.

மேலும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உள்துறை அமைச்சர் பிரீதி படேலும் இப்போட்டியில் இணைவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பாரம்பரியமாக குறைவான வரிவிதிப்பு நடைமுறைக்கு கன்சர்வேட்டிவ் கட்சி ஆதரவளித்து வருகிறது.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் தேர்தலில் இரண்டுக்கு மேற்பட்டோர் போட்டியிட்டால் இரு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறும்.

முதற்கட்டமாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல சுற்றுகளாக வாக்களித்து இறுதிச் சுற்றில் போட்டியிடும் இருவரைத் தேர்ந்தெடுப்பர். அதன்பின்னர் கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் வாக்களித்து வெற்றியாளரைத் தெரிவுசெய்வர். அவரே பிரதமராக நியமிக்கப்படுவார்.

இந்நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி அடுத்த பிரிட்டன் பிரதமருக்கான வாக்களிப்பு நடைபெறும் என்றும் அன்றே புதிய பிரதமர் அறிவிக்கப்படுவார் என்றும் தேர்தல் அமைப்பு தெரிவித்துள்ளது.

## மக்களின் கண்ணீர் அஞ்சலியுடன் விடைபெற்றார் ஷின்சோ அபே





தேர்தல் பிரசாரத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்ட ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேவின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெறுகிறது.

கடந்த 8ஆம் திகதி கொல்லப்பட்ட ஷின்சோ அபேவின் உடல் டோக்கியோவிலுள்ள ஷோஜோஜி கோவிலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மறைந்த முன்னாள் பிரதமருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

## பிரித்தானியாவில் வெயிலின் தாக்கத்தால் உராய்வு ஏற்பட்டு தீப்பற்றிய தண்டவாளம்



லண்டனில் அதிக வெப்பத்தால் தண்டவாளங்களில் உராய்வு ஏற்பட்டு, தீப்பற்றி எரிந்துள்ளது.

லண்டன் விக்டோரியா நகர் நோக்கி செல்லும் ரயில்வே தண்டவாளம் கடும் வெப்பத்தால் தானாக தீப்பற்றி எரியும் புகைப்படங்களை தென்கிழக்கு ரயில்வே நிர்வாக இயக்குநர் வெளியிட்டுள்ளார்.

கொளுத்தும் வெயிலின் உஷ்ணம் தாங்காமல் நீச்சல் குளங்கள், கடற்கரை, தண்ணீர் பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களை நோக்கி மக்கள் படையெடுத்து வருகின்றனர்.

### டான்பாஸை கைப்பற்ற துடிக்கும் ரஷ்யா

## அடுக்குமாடி குடியிருப்பு மீது ரொக்கெட் தாக்குதல்; இடிபாடுகளில் சிக்கி 29 பேர் உயிரிழப்பு



உக்ரைனின் டொனெட்ஸ்க் பகுதியிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது ரஷ்ய படைகள் நடத்திய தாக்குதலில் 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 140 நாட்களாக இடம்பெற்று வருகிறது. ரஷ்ய தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ், மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் சின்னாப்பின்னமாக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 87இலட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில் டான்பாஸை முழுவதுமாக கைப்பற்ற முயற்சிக்கும் ரஷ்யா, தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை சாசிவ் யார் நகரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் மீது ரொக்கெட் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் அக்கட்டடம் உருக்குலைந்தது.

இடிபாடுகளிலிருந்து இதுவரை 24 பேர் சடலமாக மீட்கப்பட்டதாகவும், அதில் சிக்கியுள்ள 5 சடலங்களை மீட்க முடியவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பிரபஞ்சத்தின் ஆரம்பம் எப்படி இருக்கும்?



பிரபஞ்சத்தின் ஆரம்ப தோற்றத்தைக் கண்டறியும் முயற்சியின் ஒரு பகுதியாக நாசா புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளது.


சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, பிரபஞ்சத்தின் ஆரம்ப தோற்றத்தை அறிவது குறித்து தீவிரமான ஆய்வைச் செய்து வருகிறது.

அதன்படி, பிரபஞ்சம் தோன்றி 13.8 பில்லியன் ஆண்டுகள் ஆனதைக் கணக்கில் கொண்டு அப்போது தோன்றிய நட்சத்திரங்கள் மற்றும் அங்கு மனிதர்கள் வாழத் தகுதிகொண்ட கிரகங்களைக் கண்டறியும் முயற்சியாக கடந்த ஆண்டு விண்வெளியில் 10 பில்லியன் டொலர்(ரூ.79,000 கோடி) செலவில் ஜேம்ஸ் வெப் ஸ்பேஸ் என்கிற சக்திவாய்ந்த தொலைநோக்கியை(The James Webb Space Telescope) நிறுவியது.

இந்நிலையில், பல மாதங்கள் காத்திருப்பிற்குப் பின் வெப் ஸ்பேஸ் தொலைநோக்கியில் பதிவான 13 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பிரபஞ்சத்தின் பால்வெளித் திரள்களில்(Milky Way) சிதறிக்கிடந்த ஒளிகளை ஒன்றிணைத்து நாசா புதிய வண்ணப் புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.

நட்சத்திரங்கள், துகள்கள் என சிதறிய ஒளிக்கதிர்களால் ஓவியம்போல காட்சியளிக்கும் இந்தப் படத்தைக் கண்ட பல விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட பிரபஞ்சத்தின் தோற்றத்தை நெருங்கிவிட்டதாகவும் இது அறிவியல் உலகின் மகத்தான சாதனை எனவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

## பொன்னியின் செல்வனில் இரண்டு பூரணச் சந்திரர்கள்



இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி வரும் பொன்னியின் செல்வன் படத்தின் முன்னோட்ட காட்சிகள் வெளியாக ரசிகர்களிடையே ஏகோபித்த வரவேற்பை பெற்றுள்ளதுடன், படம் குறித்த பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கல்கி எழுதிய நாவலைப் படித்தவர்கள், படிக்காதவர்கள் எனப் பலரும் டீசரைப் பார்த்து வியந்து பாராட்டி வருகிறார்கள். படத்தைப் பார்ப்பதற்கு முன்பு நாவலைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கடந்த சில நாட்களில் பலரும் பொன்னியின் செல்வன் நாவலின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புகளை அதிகம் வாங்கி வருவதாக பதிப்பக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொன்னியின் செல்வன் நாவலில் இரண்டு முக்கியப் பெண் கதாபாத்திரங்கள் நந்தினி மற்றும் குந்தவை. அவர்கள் இருவரின் அழகைப் பற்றி பல்வேறு இடங்களில் கல்கி அவ்வளவு இரசனையாக எழுதியிருப்பார். நாவலைப் படிக்கும்போது ஒவ்வொருவருக்கும் அந்த முகங்கள் ஒரு விதமான கற்பனை உருவத்தில் மனதிற்குள் தோன்றியிருக்கும்.

பொன்னியின் செல்வன் படத்தில் அந்த இரு கதாபாத்திரங்களில் யாரை நடிக்க வைக்கப் போகிறார் மணிரத்னம் என்ற எதிர்பார்ப்பு பட அறிவிப்பு வந்தபோதே எழுந்தது. நந்தினியாக 1994இல் உலக அழகிப் பட்டம் வென்ற நடிகை ஐஸ்வர்யா ராயும், குந்தவையாக 1999இல் 'மிஸ் சென்னை' அழகிப் பட்டம் வென்ற நடிகை த்ரிஷாவும் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள். ஐஸ்வர்யா ராய் பற்றி நாவல் ரசிகர்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், குந்தவை கதாபாத்திரத்தில் த்ரிஷா பொருத்தமாக இருப்பாரா என்று பலர் சந்தேகப்பட்டார்கள். அப்படி சந்தேகப்பட்டவர்களை இப்போது ஆச்சரியப்பட வைத்திருக்கிறார் த்ரிஷா.

நாவலில் நந்தினி, குந்தவை இருவரும் சந்திக்கும் அத்தியாயம் 14 - இரண்டு பூரண சந்திரர்கள் தலைப்பில் கல்கி அவ்வளவு வர்ணனைகளுடன் எழுதியிருப்பார். அந்த வர்ணனைக்கு ஏற்றபடி படத்தில் காட்சி அமைந்திருக்கிறது என்பது படத்தின் டீசரிலேயே தெரிகிறது.

ஐஸ்வர்யாவும், த்ரிஷாவும் தோன்றும் அந்த ஒரு காட்சியில் இருவருமே பேரழகிகளாக இருக்கிறார்கள் என ரசிகர்கள் பலரும் குறிப்பிட்டு வருகிறார்கள். அதற்குக் காரணமான ஒளிப்பதிவாளர் ரவி வர்மன், மேக்கப் கலைஞர்கள், ஆடை அலங்காரக் கலைஞர்கள் ஆகியோரைப் பாராட்டியே ஆக வேண்டும்.


நாவலில் கல்கி எழுதிய வர்ணனை கீழே உள்ளது. அதைப் படித்துவிட்டு மீண்டும் டீசரைப் போய்ப் பாருங்கள்.

"குந்தவை யானையிலிருந்தும் நந்தினி பல்லக்கிலிருந்தும் இறங்கினார்கள். நந்தினி விரைந்து முன்னால் சென்று குந்தவைக்கு முகமன் கூறி வரவேற்றாள். அந்த வரவேற்பைக் குந்தவை புன்னகை புரிந்து அங்கீகரித்தாள்.

சோழ நாட்டின் அந்த இரு பேரழகிகளையும் அங்கு ஒருங்கே கண்ட ஜனத்திரளின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. நந்தினி பொன் வர்ணமேனியாள். குந்தவை செந்தாமரை நிறத்தினாள். நந்தினியின் பொன்முகம் பூரண சந்திரனைப்போல் வட்ட வடிவமாயிருந்தது. குந்தவையின் திருமுகம் கைதேர்ந்த சிற்பிகள் வார்த்த சிலை வடிவத்தைப்போல் சிறிது நீள வாட்டமாயிருந்தது. நந்தினியின் செவ்வரியோடிய கருநிறக் கண்கள் இறகு விரித்த தேன் வண்டுகளைப்போல் அகன்று இருந்தன.

குந்தவையின் கருநீல வர்ணக் கண்கள் நீலோத்பலத்தின் இதழைப்போல் காதளவு நீண்டு பொலிந்தன. நந்தினியின் மூக்கு தட்டையாக வழுவழுவென்று தந்தத்தினால் செய்ததுபோல் திகழ்ந்தது. குந்தவையின் மூக்கு சிறிது நீண்டு பன்னீர்ப்பூவின் மொட்டைப்போல் இருந்தது. நந்தினியின் சிறிது தடித்த இதழ்கள் அமுதம் ததும்பும் பவழச் செப்பைப் போல் தோன்றியது. குந்தவையின் மெல்லிய இதழ்களோ தேன் பிலிற்றும் மாதுளை மொட்டெனத் திகழ்ந்தது.

நந்தினி தன் கூந்தலைக் கொண்டை போட்டு மலர்ச்செண்டுகளைப் போல் அலங்கரித்து இருந்தாள். குந்தவையின் கூந்தலோ "இவள் அழகின் அரசி" என்பதற்கு அடையாளமாகச் சூட்டிய மணி மகுடத்தைப்போல் அமைந்திருந்தது.



இப்படியெல்லாம் அந்த இரு வனிதா மணிகளின் அழகையும் அலங்காரத்தையும் தனித்தனியே பிரித்து ஒப்பிட்டுப் பார்த்து எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்று சொல்ல முடியாது தான். ஆயினும் பொதுப்படையாக இருவரும் நிகரில்லாச் சௌந்தரியவதிகள் என்பதையும், அங்க அமைப்பிலும் அலங்காரத்திலும் மாறுபட்டவர்கள் என்பதையும் அனைவருமே எளிதில் உணர்ந்தார்கள்.

நந்தினியின் பேரில் அதுவரையில் நகர மாந்தர்களுக்கு ஓரளவு அதிருப்தியும் அசூயையும் இருந்து வந்தன. குந்தவைப் பிராட்டியை ஒவ்வொருவரும் தங்கள் குல தெய்வமெனப் பக்தியுடன் பாராட்டினார்கள். ஆனால், இப்போது பழுவூர் இளைய ராணி கோட்டை வாசலுக்கு வந்து இளைய பிராட்டியை வரவேற்றது மக்களுக்கு மிகுந்த குதூகலத்தை விளைவித்தது.

மக்கள் இவ்விதம் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருக்கையில் நந்தினிக்கும், குந்தவைக்கும் நடந்த சம்பாஷணை, மின்னலை மின்னல் வெட்டும் தோரணையில் அமைந்தது.

# மெல்பர்னிலிருந்து தமிழ் முழங்கும் லெ.முருகபூபதி

## எழுத்தாளன் எனும் அடையாளத்தின் முகவரியாளர்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

'எழுத்தாளன்' என்ற அடையாளம்தான் எனது முகவரியென்றால், அதனை தக்கவைத்துக் கொள்ளவேண்டியதும் எனது பொறுப்பாகும். ஆயினும் என்னை நேசிக்கின்ற இலக்கிய வாதிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழ்ந்து, 'மனிதன்' என்ற முகவரியை எனக்கு தந்திருக்கிறார்கள். அதனை தக்கவைத்துக்கொள்வதுதான் எனது வாழ்வும் பணியுமாகும் என மெல்பர்னில் இருந்து தமிழ் முழங்கும் லெட்சுமணன் முருகபூபதியின் 71ஆவது அகவை நாள் (ஜூலை 13, 1951) இன்றாகும்.

**வீரகேசரியில் ஊடகப்பணி**

ஈழத்து புகலிட இலக்கியப்பரப்பில் லெ.முருகபூபதி தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக்கொண்டவர்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் பிறந்து, வீரகேசரியில் 1972ஆம் ஆண்டு ஊடகப்பணியையும் இலக்கியப்பணியையும் தொடங்கிய லெ.முருகபூபதி இன்றுவரை தொடர்கின்றார் என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும்.

லெ.முருகபூபதி சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளராக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார். நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் செயலாளராகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசியசபை உறுப்பினராகவும், அதனது கொழும்புக் கிளையின் செயலாளராகவும் இருந்தவர். அதன் பின்னர் 1987ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து, இங்கு தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடாத்துவதில் முன்னின்று உழைப்பதும் கவனத்துக்குரியது. 2011ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம இணைப்பாளராகச் செயற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

லெ.முருகபூபதி 1972இல் கனவுகள் ஆயிரம் சிறுகதை மூலமாக மல்லிகையில் அறிமுகமானார். 1975இல் வெளியான 'சுமையின் பங்காளிகள்' என்ற இவரின் முதலாவது சிறுகதைத்தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருதும் கிடைத்தது. வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர். ரசஞானி, ரிஷ்யசிங்கர் என்ற புனைபெயர்களிலும் எழுதி வருகிறார்.

**முருகபூபதி படைப்புக்கள்**

படைப்பாளியின் வேலை வாசகனின் சிந்தனையில் ஊடுருவுவது தான், அதுவே படைப்பின் வெற்றியாகும். அதனை வாசகனே தீர்மானித்துக்கொள்வான். எதனையாவது படித்துவிட்டு உங்கள் எழுத்துக்களினால் நான் திருந்திவிட்டேன், மாறிவிட்டேன் என்று எவரும் சொன்னால் அதனைக்கேட்டு மகிழ்ச்சியடையலாம். எமது மகிழ்ச்சியை பறைதட்டி முழக்கி சொல்லவேண்டிய அவசியம் இல்லை எனக் கூறும் லெ.முருகபூபதி, தனது

'பறவைகள்' நாவலை தஞ்சாவூர் பல்கலைக்கழக மாணவி ஒருவர் தமது MPhl பட்டத்திற்காக ஆய்வுசெய்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே என்கிறார்.

1975இல் வெளியான லெ.முருகபூபதியின் சிறுகதைத் தொகுதியான 'சுமையின் பங்காளிகள்' இலங்கை தேசிய சாகித்திய விருதுபெற்றது. அத்துடன் சமாந்தரங்கள் (1989), வெளிச்சம் (1998), எங்கள் தேசம் (2000), கங்கை மகள் (2005), நினைவுக்கோலங்கள் (2006), மதக செவனெலி (Shadows Of Memories) - மொழிபெயர்ப்பு (2012), கதைத் தொகுப்பின் கதை (2021), பறவைகள் (2001) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் லெ.முருகபூபதி படைத்துள்ளார்.

1985இல் வீரகேசரி ஆசிரியர் குழுவில் இருந்தபோது சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் - மாணவர் விழாவில் கலந்துகொண்டு, பயண இலக்கியமான 'சமதர்மப் பூங்காவில்' நூலை லெ.முருகபூபதி 1990இல் வெளியிட்டுள்ளார்.

**அவுஸ்திரேலியாவில் தமிழ்ப் பணி**

கடித இலக்கியமான 'கடிதங்கள்'(2001), நேர்காணல் சந்திப்பு (1998) இலக்கிய மற்றும் ஊடக வாழ்வில் சந்தித்த ஆளுமைகளின் கருத்துக்களை தொகுத்து எழுதிய நூல், மற்றும் கட்டுரை நூல்களான நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (1995) தமிழ், சிங்கள, முஸ்லிம், சோவியத் உக்ரைன் இலக்கிய நண்பர்கள் 12 பேரைப்பற்றிய நினைவுத்தகவல்கள், இலக்கிய மடல் (2000), மல்லிகை ஜீவா நினைவுகள் (2001), எம்மவர் (2003), அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய விபரத்திரட்டு நூல்களையும் எழுதியுள்ளார்.

கவிஞர் அம்பி வாழ்வும் பணியும் (2004), ராஜ ஸ்ரீகாந்தன் நினைவுகள் (2005) , உள்ளும் புறமும் (2011, சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பயன்பாடும், சொல்ல மறந்த கதைகள் (2014), சொல்ல வேண்டிய கதைகள் (2017), சொல்லத்தவறிய கதைகள் (2019), இலங்கையில் பாரதி - ஆய்வு நூல் (2019), நடந்தாய் வாழி களனி கங்கை (2021), யாதுமாகி (2022), வாழும் வரலாறு மல்லிகை ஜீவா (2022) என இதுவரையில் பல நூல்களை லெ.முருகபூபதி தமிழ் இலக்கியத்திற்காக படைத்துள்ளமை வரலாற்றுச் சாதனையாகும்.




**தேசிய சாகித்திய விருதுகள்**

"பரிசுகள் உச்சங்களை தீர்மானிப்பதில்லை. வாசகர்களிடம் பெறும் வரவேற்புத்தான் உச்சம். சிறுகதைகளை படிக்கும் வாசகனின் சிந்தனையில் அது ஊடுருவவேண்டும். படித்த பின்னர் சில காலம் ஏன் நெடுங்காலம் வாசகரின் மனதில் ஒரு சிறுகதை நின்றால் அதுதான் உச்சம்.

எனது சில கதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றை மொழிபெயர்த்தவர்கள் பார்வையில் அவை உச்சமாக இருந்திருக்கலாம்" எனக் கூறும் லெ.முருகபூபதி

பெற்ற விருதுகள் பல. சுமையின் பங்காளிகள் நூலுக்கு 1975ஆம் ஆண்டு சிறந்த சிறுகதைத்தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

'பறவைகள்' நூலுக்கு 2002ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருதும் கிடைத்தது. அத்துடன்

2002 அவுஸ்திரேலியா தினத்தில் சிறந்த பிரஜைக்கான விருதும் கிடைத்தது.

**புலம்பெயர் இலக்கியப் பணி**

புலம்பெயர் இலக்கியம் என்பது ஈழத்தமிழர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து இலக்கியம் படைத்த பின்னர்தான் பேசுபொருளானது.

போர் குறித்து எழுதினால் அது போர்க்கால இலக்கியம்.

"கருத்து முரண்பாடுகள் ஒரு மனிதனின் மேன்மையை இனம் காண்பதில் தவறிழைத்துவிடல் தகாது

என்பதில் நான் திடசித்தமானவன்" என்ற வால்டேயரின் கூற்றுடன் உடன்பாடு மிக்கவன். இலக்கிய உலகில் பயிலத் தொடங்கிய நாள் முதலாக அல்ல, அதற்கும் முன்பே எனது இயல்பு அப்படித்தான். எனவே, கலை, இலக்கிய தேவை நிமித்தம் நான் சந்தித்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கருத்துக்களையும் அனுபவங்களையும் பதிவுசெய்வதிலும் ஆர்வம் கொண்டிருந்த முருகபூபதிக்கு, அவரின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் "ரஸஞானி" என்ற ஆவணப்படத்தை 2017 இல் மெல்பர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும் வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை மாணவர் கல்வி நிதியம்**

ஈழத்தில் நீடித்த போரில் தந்தைமாரை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் திட்டம் ஒன்றை அவுஸ்திரேலியாவில் "இலங்கை மாணவர் கல்வி நிதியம்" (CEYLON STUDENTS EDUCATIONAL FUND) என்ற அமைப்பை ஸ்தாபித்து, இந்த அமைப்பு தமது பணியில் 27ஆண்டுகளை நிறைவுசெய்து, தொடர்ந்தும் இயங்குகிறது என்றால் அதற்குரிய பெருமைக்குரியவர் லெ.முருகபூபதிக்கே உரித்தாகும்.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தொடர்ந்தும் பயனடைந்து வருகின்றனர். இன்றும் இந்த அமைப்பின் ஊடாக பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் உதவியை பெறுகின்றனர். போர் முடிவுக்கு வந்ததும் வருடம்தோறும் அங்கு சென்று மாணவர்களை நேருக்கு நேர் சந்தித்து உதவிகளை இக்கல்வி அமைப்பு மேற்கொள்கிறது.

இந்தப்பணியில் பலரும் இணைந்து தாயக மாணவர்களுக்காக உதவி வருகின்றனர். "எழுத்து எனது தொழில். இலங்கையில் எனக்கு சோறு தந்த தொழில். அதனால் அதனைவிட்டு நான் அகலமாட்டேன். புகலிடத்தில் வேறு தொழில்களில் ஈடுபட்டு, குடும்பத்திற்காக உழைத்தபோதிலும் நான் ஊதியம் எதுவும் பெறாமலேயே எழுத்துத்துறையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன்" எனக்கூறும் முருகபூபதி இலங்கையில் மல்லிகை, ஞானம் முதலான இலக்கிய இதழ்களில் அட்டைப்பட அதிதியாகவும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

எனது வாழ்நாளில் கலை, இலக்கியவாதிகளை மாத்திரமின்றி அரசியல் தலைவர்கள், தொழிற்சங்க வாதிகள், சமூக சேவையாளர்கள், பிரமுகர்கள், தொழிலாளர்கள் உட்பட பலதரப்பட்டவர்களையும் பத்திரிகை, சஞ்சிகைகளுக்காக நேரில் சந்தித்திருக்கின்றேன். பொதுவாழ்க்கை எனக்கு புதியதல்ல. தாயகத்திலும் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டேன். இன்றும் அவுஸ்திரேலியாவிலும் இலங்கையிலும் பொது வேலைகளில் ஈடுபடுகின்றேன். இலக்கியம், எழுத்து பொதுவாழ்க்கை என்பனதான் எனது வாழ்க்கை என மெல்பர்னிலிருந்து தமிழ் முழங்கும் லெ. முருகபூபதி, 2004ஆம் ஆண்டுமுதல் இயங்கிவரும் தமிழ் இலக்கிய கலைச்சங்க ஸ்தாபக உறுப்பினருமாவார்.

மேலும், அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம், விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கம், மெல்போர்ன் தமிழ்ச்சங்கம் முதலான அமைப்புகளின் பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்ற லெ.முருகபூபதி, தமிழ் கலை இலக்கிய உலகிற்கு தொடர்ந்து சேவையாற்றிட அவரின் அகவை நாளினில் வாழ்த்திடுவோம்.

# ஜோர்தானில் இலங்கையின் கைத்தறி ஆடைகள் காட்சிப்படுத்தல்






இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஏற்றுமதித் தரம் வாய்ந்த இலங்கையின் பாரம்பரிய கைத்தறி ஆடைகள் குறித்து ஜோர்தானிய ஆடை இறக்குமதியாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகம் அண்மையில் சான்சரி வளாகத்தில் முக்கிய ஆடை இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடலை நடத்தியது.

இந்த கலந்துரையாடலின்போது தூதுவர் ஷானிகா திஸாநாயக்க, தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்ட வடிவமைப்புகளைப் பயன்படுத்தி நெசவு செய்யும் திறமையான கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்ட ஆடை வரலாற்றின் ஒரு கண்ணோட்டத்தை வழங்கினார். இலங்கைப் பெண் கைவினைஞர்களுக்கு வலுவூட்டி அவர்கள் வீட்டிலிருந்தே சம்பாதிக்க வழிவகுத்த இந்த ஆக்கபூர்வமான தொழிலின் உழகை;கும் தன்மை குறித்து வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட 40 ஆடை மாதிரிகள் கலந்து கொண்டவர்களுக்குக் காண்பிக்கப்பட்டதுடன், இதன்மூலம் அவர்கள் வெவ்வேறு அமைப்புமுறைகள், நுணுக்கமாக நெய்யப்பட்ட சின்னங்களின் வடிவங்கள், படங்கள் மற்றும் வண்ணங்களின் அதிர்வு ஆகியவற்றைக் கண்டறிந்து கொண்டனர். ஜோர்தானிய இறக்குமதியாளர்கள் தரத்தால் ஈர்க்கப்பட்டதுடன், சில ஆடைகளை இறக்குமதி செய்வதில் ஆர்வம் காட்டினர்.

ஐலண்ட் கிராஃப்ட், ஏர்பன் ஐலண்ட் மற்றும் களனி பெப்ரிக்ஸ் ஆகியவற்றிலிருந்து ஆடைகள் மற்றும் தயாரிப்புக்களின் சுயாதீன சேகரிப்பு பற்றிய காணொளி காட்சிப்படுத்தப்பட்டது. ஜோர்தான் சந்தை தற்போது துருக்கி, சீனா மற்றும் இந்தியாவிலிருந்து ஆடைகளை இறக்குமதி செய்கின்றது.




# ஜூன் மாதத்தின் சிறந்த வீரரான பெயர்ஸ்டோ

ஜூன் மாதம் நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஜூன் மாதத்தின் சிறந்த வீரராக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஜோனி பெயர்ஸ்டே தெரிவானார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடும் வீரர்களை மாதந்தோறும் கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு மாதத்திலும் சிறப்பாக விளையாடிய சிறந்த வீரரை தேர்வுசெய்து ஐ.சி.சி. அறிவித்து வருகிறது. அந்த வகையில் கடந்த ஜூன் மாதத்திற்கான சிறந்த வீரர் யார் என்பதை அடையாளம் காண்பதற்கான வீர, வீராங்கனைகள் பெயரை ஐ.சி.சி பரிந்துரைத்திருந்தது.

இதில் சிறந்த வீரருக்கான பட்டியலில் ஜோனி பெயர்ஸ்டோ, டேரில் மிட்செல், ஜோ ரூட் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதில் கடந்த மாதம் நியூஸிலாந்துக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஜோனி பெயர்ஸ்டோ சிறந்த வீரராக தேர்வுசெய்யப்பட்டார். சிறந்த வீராங்கனைக்கான விருதை தென்னாபிரிக்க வீராங்கனை மரிசான் கேப் தட்டிச் சென்றார்.



# கண்டி ஃபால்கன்ஸ் அணியின் ஆலோசகரான சனத்

ஆம் ஆண்டுக்கான லங்கா ப்ரீமியர் லீக் (எல்.பி.எல்) தொடர் எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும், அதிரடி துடுப்பாட்ட வீரருமான சனத் ஜயசூரிய கண்டி ஃபால்கன்ஸ் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சனத் ஜயசூரிய தெரிவிக்கையில், “2022 எல்.பி.எல். தொடரில் கண்டி ஃபால்கன்ஸ் அணியின் ஆலோசகராக செயல்படுகின்ற வாய்ப்பு கிடைத்தமை ஒரு பாக்கியம். பல ஆண்டுகளாக இலங்கை கிரிக்கெட்டுக்கு சேவை செய்து அதன் வளர்ச்சிக்கு உதவிசெய்ய கிடைத்தமை தொடர்பில் நான் மிகுந்த திருப்தி அடைந்துள்ளேன். எனவே, அந்தப் பயணத்தின் ஓர் அங்கமாக இம்முறை எல்.பி.எல். தொடரில் கண்டி ஃபால்கன்ஸ் அணிக்கு ஆலோசகராக செயற்படும் வாய்ப்பு கிடைத்தமை எனக்குக் கிடைத்த பாக்கியம். இது ஒரு அற்புதமான புதிய ஆரம்பமாக இருக்கும். இம்முறை எல்.பி.எல். தொடரில் சந்திப்போம்” எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டுக்கான எல்.பி.எல். தொடர் இம்மாதம் 31ஆம் திகதிமுதல் கொழும்பு ஆர்.பிரேமதாச கிரிக்கெட் மைதானம் மற்றும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

# கண்டி அணியில் இணையும் நிஸ்ஸங்க



லங்கா ப்ரீமியர் லீக் தொடரில் கண்டி ஃபால்கன்ஸ் அணியில் விளையாட இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பெத்தும் நிஸ்ஸங்க தேர்வு செய்யப்பட்டுள்ளார். வனிந்து ஹசரங்க மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோருடன் பெத்தும் நிஸ்ஸங்க கண்டி ஃபால்கன்ஸ் அணியை பலப்படுத்துவார் என கருதப்படுகிறது.

பெத்தும் நிஸ்ஸங்கவை வரவேற்று, கண்டி உரிமையாளரான பர்வேஸ் கான் கூறுகையில், “நிஸ்ஸங்க அணியில் சேர்க்கப்பட்டிருப்பது எங்கள் பேட்டிங்கை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், இலங்கை டி20 அணியில் அவர் விளையாடிய அனுபவம் அணிக்கு மிகப்பெரிய சொத்தாக அமையும். எல்.பி.எல். போட்டியில் கண்டி ஃபால்கன்ஸ் அணிக்காக அவர் விளையாடுவதைக் கண்டு ரசிகர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன்“ என தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் இருபதுக்கு 20 வீரர்களுக்கான துடுப்பாட்ட தரவரிசையில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரராக பெத்தும் நிஸ்ஸங்க முன்னிலையில் உள்ளார். தற்போது அவர் 8வது இடத்தில் உள்ளார். கடந்த வாரம் நடைபெற்ற எல்.பி.எல். அணி வீரர்களுக்கான தேர்வில் பெத்தும் நிஸ்ஸங்கவை எந்தவொரு அணியும் உள்வாங்கவில்லை.

அதனைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்கள் மூலமாக பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையில், நிஸ்ஸங்க இவ்வாறு கண்டி அணியில் இடம்பெற்றுள்ளார். இதற்கிடையில், காயம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறும் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் உஸ்மான் ஷின்வாரிக்கு பதிலாக கண்டி ஃபால்கன்ஸ் அணியில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் அஹமட் டானியல் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது லங்கா ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடர் ஜூலை 31முதல் ஆகஸ்ட் 21வரை நடைபெறவுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# அஸ்வினை நீக்கும்போது கோஹ்லியை நீக்க முடியாதா?

## கபில் தேவ் கேள்வி



டெஸ்ட் கிரிக்கெட்டில் கிட்டத்தட்ட 450 விக்கெட்களை வீழ்த்தியுள்ள ரவிச்சந்திரன் அஸ்வினை விளையாடும் லெவனில் இருந்து நீக்கும்போது, நீண்ட காலமாக பேட்டிங்கில் தடுமாறி வரும் விராட் கோஹ்லி டி20 போட்டியில் இன்றியமையாதவர் அல்ல என்று இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த கபில் தேவ் கூறும்போது, “தற்போது டி20 போட்டியில் விளையாடும் லெவனில் விராட் கோஹ்லியை வெளியே அமர வைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. உலகின் 2ஆம் நிலை பந்து வீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வினை டெஸ்ட் அணியில் நீக்கும்போது, முதல் நிலை வீரரான பேட்ஸ்மேனையும் நீக்கலாம். கடந்த சில ஆண்டுகளாக நாம் பார்த்தது போன்ற உயர்மட்ட பேட்டிங் தற்போது விராட் கோஹ்லியிடம் இல்லை. அவர் சிறப்பாக செயற்படாத பட்சத்தில் திறமையான இளம் வீரர்களை அணியில் விலக்கி வைக்க முடியாது.

அணியில் ஆரோக்கியமான போட்டியை நான் விரும்புகிறேன். இளம் வீரர்கள் முயற்சி செய்து விராட் கோஹ்லியை விஞ்ச வேண்டும். ஒரு பெரிய வீரரை (விராட் கோஹ்லி) தேர்வுசெய்யவில்லை என்றால் அவர் சிறப்பாக செயற்படவில்லை என்பதே காரணமாக இருக்கும். தற்போதைய பார்மை கருத்திற்கொண்டே விளையாடும் 11 வீரர்களை தேர்வுசெய்ய வேண்டும். செல்வாக்கின் அடிப்படையில் தேர்வு செய்யக்கூடாது” என்றார்.



# கோஹ்லியின் ஃபார்மினால் அவரை மோசமான வீரராக கருதிவிட முடியாது

## ரோஹித்

கடந்த சில வருடங்களாக மோசமான பேட்டிங் ஃபார்ம் காரணமாக ரன் சேர்க்க முடியாமல் தடுமாறிவரும் இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லிக்கு ஆதரவாக இந்திய அணியின் தலைவர் ரோஹிட் சர்மா பேசியுள்ளார். நிறைவுக்கு வந்த இங்கிலாந்துக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரில் கோஹ்லி ஏமாற்றத்தையே அளித்தார். இதனால் அவரை டி20 அணியில் இருந்து நீக்க வேண்டும் என ஒருசிலரும், அவரை தற்காலிக ஓய்வு எடுக்கச்சொல்லி பல முன்னணி வீரர்களும் அறிவுறுத்தி வருகின்றனர். இந்நிலையில் ரோஹிட் சர்மா, விராட் கோஹ்லியின் பேட்டிங் ஃபார்ம் குறித்த கேள்விக்கு பதிலளித்தார். அதில், “எக்ஸ்பெர்ட்ஸ் வெளியிலிருந்து விளையாட்டை பார்க்கிறார்கள். அணிக்குள் என்ன நடக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது. நாங்கள் எங்கள் அணியை உருவாக்குகிறோம். இதற்கு பின்னால் நிறைய சிந்தனை இருக்கிறது. நாங்கள் வீரர்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குகிறோம். இவை வெளியில் இருந்து நீங்கள் அறியாத விடயங்கள். எனவே வெளியில் நடப்பது முக்கியமல்ல. உள்ளே என்ன நடக்கிறது என்பது எங்களுக்கு மிகவும் முக்கியமானது.

ஃபார்மை பற்றிப் பேசினால், எல்லோரும் ஏற்றத் தாழ்வுகளை சந்திக்கிறார்கள். இதனால் வீரரின் தரம் பாதிக்கப்படாது. ஒரு வீரர் பல ஆண்டுகளாக சிறப்பாக செயல்படும்போது ஒன்றிரண்டு தொடர்கள் மோசமாக அமையக்கூடும். கிரிக்கெட்டில் இது இயல்பானது. இதன் மூலம் அவரை மோசமான வீரராக கருதிவிட முடியாது. அணியில் அந்த வீரரின் முக்கியத்துவம் எங்களுக்கு தெரியும். விமர்சனம் செய்வதற்கு அவர்களுக்கு எல்லா உரிமையும் உள்ளது. ஆனால் அது எங்களுக்கு அதிகம் முக்கியத்துவமல்ல” என்று கூறினார்.

# மூன்றாமிடத்திற்கு முன்னேறிய இலங்கை அணி

சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியில் அபார வெற்றியீட்டிய திமுத் கருணாரத்ன தலைமையிலான இலங்கை அணி ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியது.

2021 – 2023 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு தொடராக நடைபெற்ற குறித்த ஆஸி. அணியுடனான தொடரில் முதல் போட்டியில் தோல்வியை தழுவிய இலங்கை அணி 40 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் காணப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 39 ஓட்டங்களினால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி 52 புள்ளிகளுடன், 54.17 வெற்றி சதவீதத்துடன் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியது.

ICC World Test Championship 2021 - 2023

POWERED BY MRF TYRES

| POS | TEAM | PCT (%) | PTS | MATCHES W | L | D | SER | PEN |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | SOUTH AFRICA | 71.43 | 60 | 5 | 2 | 0 | 3 | 0 |
| 2 | AUSTRALIA | 70 | 84 | 6 | 1 | 3 | 3 | 0 |
| 3 | SRI LANKA | 54.17 | 52 | 4 | 3 | 1 | 4 | 0 |
| 4 | PAKISTAN | 52.38 | 44 | 3 | 2 | 2 | 3 | 0 |
| 5 | INDIA | 52.08 | 75 | 6 | 4 | 2 | 4 | -5 |
| 6 | WEST INDIES | 50 | 54 | 4 | 3 | 2 | 4 | -2 |
| 7 | ENGLAND | 33.33 | 64 | 5 | 7 | 4 | 4 | -12 |
| 8 | NEW ZEALAND | 25.93 | 28 | 2 | 6 | 1 | 4 | 0 |
| 9 | BANGLADESH | 13.33 | 16 | 1 | 8 | 1 | 5 | 0 |

இதேவேளை முதலிடத்தில் காணப்பட்ட அவுஸ்திரேலிய அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சந்தித்த தோல்வியுடன் இரண்டாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது. தற்போது 84 புள்ளிகளுடன், 70 வெற்றி சதவீதத்துடன், அவுஸ்திரேலிய அணி காணப்பட, தென்னாபிரிக்க அணி 71.43 வெற்றி சதவீதத்துடன், முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கை அணி ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் அடுத்ததாக பாகிஸ்தான் அணியை சொந்த மண்ணில் எதிர்கொள்கிறது. இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலியில் ஆரம்பமாகிறது.




# மியண்டாட் ‘எப்.எஸ்.கே.’ ப்ரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

*(கல்முனை நிருபர்)*

சாயந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தினால் வருடா வருடம் நடத்தப்படுகின்ற கிரிக்கெட் திருவிழாவான எப்.எஸ்.கே. மியன்டாட் ப்ரிமியர் லீக் சீசன் - 2 கடினபந்து கிரிக்கெட் சுற்று இன்று மிக கோலாகலமாக சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிறது.

சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டு கழகத்தின் லீக் சுற்றுத்தொடர் தலைவர் ஏ.ஏ.ஹலீம், கழகத்தின் தலைவர் ஏ.பாயிஸ், தவிசாளர் எம்.ஜே.எம்.காலித், கழகத்தின் ஆலோசனைக்குழு தலைவர் எஸ்.எம்.அமீர், உறுப்பினர்களான யு.எல்.பரிட், எஸ்.எல்.நிசார், எம்.எச்.எம். பவாஸ் ஆகிய 6 பேர் கொண்ட முகாமைத்துவ குழுவினரின் நெறிப்படுத்தலில், சாயந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தினரை ஒன்றினைந்து நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டு குறித்த போட்டிகள் இடம்பெறவுள்ளன.




வோலி லயன்ஸ் கழகத்தின் உரிமையாளராக ஏ.எல்.எ.நாசர், மருதூர் வோரியஸ் கழகத்தின் உரிமையாளராக நவாஸ், சாந்தம் சலன்ஜேஸ் கழகத்தின் உரிமையாளராக ஆர்.எம்.ரினோஸ், மாளிகா யுனைடட் கழகத்தின் உரிமையாளராக யு.கே.நஜீம் ஆகியோர் செயற்படுகின்றனர்.

போட்டிகள் யாவும் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை இடம்பெறவுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 30 வருடத்துக்கு மேல் வரலாற்றை கொண்ட முன்னணி கழகமான சாயந்தமருது மியான்டாட் கழகத்தின் சுமார் 80 கடினபந்து விளையாட்டு வீரர்கள் குறித்த போட்டியில் மொத்தமாக விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7